இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 163 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 10 – புதன்கிழமை 24 ஜனவரி 2024 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 163 : Thiruvalluvar Year - 2055 - Thai 10 - Wednesday 24 January 2024 - Trichy ★★ 12 Pages ₹ 5.00



# இளைஞர் பட்டாளத்தின் எழுச்சி மாநாடு வெற்றி.. வெற்றி..



**உங்களில் ஒருவன்**

**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் நன்றி மடல்.**

இது தந்தை பெரியார் மண்! பேரறிஞர் அண்ணா மண்! முத்தமிழறிஞர் கலைஞர் மண்! அதுமட்டுமா, அருட்பிரகாச வள்ளலார் மண்! பண்டிதர் அயோத்திதாசர் மண்! பெருந்தலைவர் காமராசர் மண்! கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் மண்! பொதுவுடைமைத் தோழர் ஜீவா மண்! சுருக்கமாகச் சொன்னால், **சமூகநீதிக் கொள்கை வழியில் பயணிக்கும் மதநல்லிணக்க மண்தான் தமிழ்நாடு என்பதை சேலத்தில் எழுச்சியுடன் நடந்தேறிய கழக இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு இந்திய ஒன்றியத்தில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் உணர்த்தியிருக்கிறது.**

கடல் இல்லா சேலத்தில் கழக இளைஞரணியினரின் தலைகளே கடலாக, மாநகரத்திலிருந்து மாநாடு நடைபெற்ற இடம் வரை 30 கிலோ மீட்டர் நீளத்திற்கு அசைந்தாடிய கருப்பு சிவப்பு இருவண்ணக்கொடிகளே அலைகளாக இருந்ததைக் கண்ட போது, மாநாட்டினை எழுச்சியும் உணர்ச்சியுமாக நடத்திக்காட்டிய இளைஞரணிச் செயலாளர் - மாண்புமிகு அமைச்சர் தம்பி உதயநிதி அவர்களும், மாநாட்டு ஏற்பாடுகளை சிறப்பாக மேற்கொண்டிருந்த கழகத்தின் முதன்மைச் செயலாளரான மாண்புமிகு அமைச்சர் கே.என்.நேரு அவர்களும், சேலம் மாவட்டக் கழகச் செயலாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகளும், இளைஞரணியின் மாநிலத் துணைச் செயலாளர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் கடந்த 3 மாதங்களுக்கு மேலாக கண்துஞ்சாமல் அயராது பாடுபட்டதன் அறுவடையைக் காண முடிந்தது. மாநாட்டு முகப்பில் சேலத்துச் சிங்கம் வீரபாண்டியார் நினைவுக் கொடி மேடையில் இருவண்ணக் கொடியை உயர்த்தி வைத்த கழகத் துணைப் பொதுச்செயலாளர் அன்புத் தங்கை கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களுக்கும், மாநாட்டுத் திறப்பாளர் மாணவரணிச் செயலாளர் - சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன் அவர்களுக்கும், மொழிப்போர்த் தியாகிகள் படத்தைத் திறந்து வைத்த சட்டமன்றக் கொறடா கோவி. செழியன் உள்ளிட்ட அனைவருக்கும் கழகத் தலைவர் என்ற முறையில் உங்களில் ஒருவனான என் நன்றியினையும் பாராட்டினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாநாட்டுப் பந்தலைக் கடந்து, வளாகம் நிறைந்து, நெடுஞ்சாலை முழுவதும் திரண்டிருந்த இளைஞர் பட்டாளம், கழகத்தின் எதிர்காலம் குறித்த பெரும் நம்பிக்கையை விதைத்துள்ளது.** நாடாளுமன்றத் தேர்தல் களத்திற்கு ஆயத்தமாக்கும் பயிற்சி அரங்கமாக இளைஞரணியின் மாநாடு அமைந்திருந்த அதேவேளையில், வெறும் தேர்தல் அரசியலை மட்டுமே திராவிட முன்னேற்றக் கழகம் முன்னெடுப்பதில்லை என்பதையும், தேர்தல் களத்திலும் கொள்கை வழி அரசியலையே முன்னெடுக்கும் என்பதையும் மாநாட்டின் மையப் பொருளாக அமைந்த, 'மாநில உரிமை மீட்பு முழக்கம்' நிரூபித்திருந்தது.

தம்பி உதயநிதி முன்மொழிந்த மாநாட்டின் 25 தீர்மானங்களும் திராவிட மாடல் அரசு எந்தளவுக்கு மக்களுக்கான நன்மைகளைச் செய்து, மாநிலத்தின் வளர்ச்சியைப் பெருக்கியிருக்கிறது என்பதுடன், மாநில உரிமைக்கானப் போராட்டத்தில் நாம் முன்னெடுக்க வேண்டியவற்றையும் தீர்மானங்கள் வாயிலாகத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இழந்த மாநில உரிமைகளை மீட்கவும், இருக்கின்ற மாநில உரிமைகளைப் பாதுகாக்கவும், மாநிலங்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய உரிமைகளைப் பெறவும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில் வகுத்தளித்த மாநில சுயாட்சிக் கொள்கையை நிறைவேற்றிட வேண்டும் என்பதையும், கல்வி - சுகாதாரம் இரண்டையும் மீண்டும் மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வரவேண்டியதன் தேவையையும், பல்கலைக்கழகங்களுக்கு முதலமைச்சரே வேந்தராக இருக்க வேண்டும் என்பதையும், எல்லாவற்றுக்கும் மேலாக அரசியலமைப்பில் தொங்கு சதையாக உள்ள நியமனப்பதவியான ஆளுநர் பதவி முற்றிலுமாக ஒழிக்கப்படவேண்டும் என்பதையும் இளைஞரணி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் உரக்கச் சொல்லியுள்ளன.

மதவெறி அரசியலால் மக்களைப் பிளவுபடுத்துகிற ஒன்றிய பா.ஜ.க. அரசு தனது பத்தாண்டு கால ஆட்சியில் மக்களின் அடிப்படைத் தேவைகள் எதையும் நிறைவேற்றாமல் முழுமையாகத் தோல்வி அடைந்திருப்பதை மறைப்பதற்காக ஆன்மீகத்தையும் அரசியலாக்கும் வகையில் அயோத்தி இராமர் கோயில் திறப்பு விழாவை நடத்துகிறது என்பதை கழகத்தின் பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்கள் ஏற்கனவே அறிக்கையாக வெளியிட்ட நிலையில், இளைஞரணி மாநாட்டில் அதனைத் தீர்மானமாகவே முன்மொழிந்து, **சிறுபான்மை மதத்தினருக்கு மட்டுமின்றி, இந்து மதத்தில் பெரும்பான்மையாக உள்ள பிற்படுத்தப்பட்ட - மிக பிற்படுத்தப்பட்ட- பட்டியல் இன - பழங்குடி மக்களுக்கும் துரோகம் இழைத்து, உண்மையான இந்து விரோதியாக செயல்பட்டு வரும் பா.ஜ.க. அரசை வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வீழ்த்திட சூளுரை மேற்கொண்டிருக்கிறது தம்பி உதயநிதி வழி நடத்துகிற இளைஞரணி.**

இலட்சக்கணக்கில் இளைஞர் பட்டாளம் திரண்டிருந்த சேலம் மாநாட்டின் எழுச்சிகரமான வெற்றியைக் கண்டு மிரண்டு போன கழகத்தின் அரசியல் எதிரிகளும், வலிமைமிக்க திராவிட இயக்கத்தை ஒருபோதும் வீழ்த்த முடியாது என்பதை அறிந்துள்ள கொள்கை எதிரிகளும் தங்களுக்கேயுரிய கேவலமான உத்தியான வதந்தி பரப்பும் வேலையை, மாநாடு நடைபெற்றுக்கொண்டிருக்கும்போதே தொடங்கிவிட்டனர்.

இராமர் கோயில் திறக்கப்படும் நாளில், தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத்துறையின் நிர்வாகத்தின்கீழ் உள்ள கோயில்களில் சிறப்பு பூசைகள் செய்வதற்கும் அன்னதானம் வழங்குவதற்கும் தடை விதிக்கப்பட்டிருப்பதாக அவதூறு நிறைந்த பொய்ச் செய்தியை ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாகப் பரப்பினர். மாநாட்டு அரங்கில் இருந்தாலும், தன் துறையின் பணிகளை ஒவ்வொரு நொடியும் மேற்கொண்ட செயல்பாபு எனப்படும் அமைச்சர் சேகர்பாபு அவர்கள் உடனடியாக இந்த அவதூறு பரப்புரைக்கு மறுப்பு தெரிவித்து, உண்மை நிலையை விளக்கி அறிக்கை வெளியிட்டார்.

**சேலத்தில் நடந்த கழக இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாட்டின் மகத்தான வெற்றி கண்டு அலறுகின்ற கழகத்தின் அரசியல் எதிரிகளும், தமிழ்நாட்டின் நிரந்தர எதிரிகளும் வதந்திகளைப் பரப்பி திசைதிருப்ப நினைத்தாலும், கழக உடன்பிறப்புகள் ஒவ்வொருவரும், வில்லில் தொடுக்கப்பட்ட கணை தனது இலக்கை மட்டுமே குறி வைப்பது போல செயல்படவேண்டும். மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்கள், பல்வேறு தலைப்புகளில் நடந்த சொற்பொழிவுகளில் சொல்லப்பட்டுள்ள கருத்துகளை முன்னெடுத்து, நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் மதவெறி பாசிச சக்திகளை முறியடிக்கும் பணியில் முனைப்பாகச் செயல்படுங்கள். நம் திராவிட மாடல் கொள்கையை இந்தியா முழுமைக்கும் கொண்டு செல்வோம். நாடாளுமன்றத் தேர்தலில் வெல்வோம்!**

**ஒரு வதந்தியை வாட்ஸ்அப், இதர சமூக வலைத்தளங்கள், தொலைக்காட்சிகள், பத்திரிகைகள் எனப் பரவச் செய்து அதனை உண்மை போல ஆக்கும் பணியை பா.ஜ.க.வில் உயர்ந்த பொறுப்பில் உள்ளவர்களே பொறுப்பின்றி செய்வது வழக்கமான ஒன்றாகிவிட்டது. இதில் தலைநகரம் டெல்லி முதல் தமிழ்நாட்டில் உள்ள பா.ஜ.க.வினர் வரை யாரும் விதிவிலக்கு கிடையாது.**

காஞ்சிபுரம் காமாட்சியம்மன் திருக்கோயிலில் பஜனை நிகழ்ச்சிகளின் போது காணொளி காட்சி ஒளிபரப்புக்கு அறநிலையத்துறை தடை விதித்திருப்பதாகவும் ஒன்றிய நிதியமைச்சரான நிர்மலா சீதாராமன் அம்மையார் அவர்கள் குறிப்பிட்டிருந்தார். ஆனால், அந்த பஜனை நிகழ்ச்சிக்கு அனுமதி கோரியவர்களே, காணொளி காட்சிகள் எதையும் திரையிட மாட்டோம் என்று குறிப்பிட்டுதான் அனுமதியே கோரியுள்ளனர். இதனை மறைத்துவிட்டு, ஒன்றிய நிதியமைச்சர் பரப்பிய உண்மைக்கு மாறான செய்தி.. அல்ல, அல்ல, திட்டமிடப்பட்ட வதந்தி, பொழுது விடிவதற்குள் பொய் என அம்பலமானது.

அதுமட்டுமல்ல, இந்தப் பொய்ப் பரப்புரைக்குச் சென்னை உயர்நீதி மன்றமே கண்டனம் தெரிவித்துள்ளதையும், தமிழ்நாட்டை என்றென்றும் அமைதிப் பூங்காவாகத் திகழச் செய்யும் மதநல்லிணக்க எண்ணம் கொண்ட மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். "பக்தி என்பது மகிழ்ச்சிக்கும் அமைதிக்கானதும் மட்டுமே. சமூகத்தில் நிலவும் சமநிலையைச் சீர்குலைப்பதற்காக அல்ல" என்றும், சிறப்பு பூஜைகளுக்கு எந்தத் தடையும் விதிக்கப்படாத நிலையில், தவறான பரப்புரையால் சட்டம் - ஒழுங்கு சீர்கேட்டிற்கு வழி வகுத்திடக்கூடாது என்றும் உயர்நீதிமன்றம் கண்டனம் தெரிவித்து எச்சரிக்கை விடுத்துள்ளது.

**அரசியல் சட்டத்தையே மதிக்காத போக்குடன் நடந்துகொள்ளும் பா.ஜ.க.வின் உயர்ந்த பொறுப்பில் உள்ளவர்களும், பா.ஜ.க.வால் உயர்ந்த பொறுப்பைப் பெற்றவர்களும் தொடர்ந்து வதந்தி பரப்பும் வாட்ஸ்அப் யுனிவர்சிட்டிகளாகவே செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.** தமிழ்நாட்டின் ஆளுநராக நியமனப் பதவியில் உள்ள மாண்புமிகு ஆர்.என்.ரவி அவர்களின் அதிகாரப்பூர்வ சமூக வலைத்தளப் பக்கத்தில், இந்து சமய அறநிலையத் துறை நிர்வாகத்தில் சென்னை மேற்கு மாம்பலம் அருள்மிகு கோதண்டராமர் கோயிலுக்கு வழிபாடு செய்யச் சென்ற போது, பூசாரிகள் மற்றும் கோயில் ஊழியர்களிடம் கண்ணுக்குப் புலப்படாத பயம் தெரிந்ததாகவும், அயோத்தி இராமர் கோயிலில் பால இராமர் சிலை நிறுவப்படும் நாளில், கோதண்டராமர் கோயில் வளாகம் கடுமையான அடக்குமுறை உணர்வை வெளிப்படுத்துவதாகவும் தன் மனதின் வன்மத்தைப் பதிவிட்டுள்ளார்.

**காமாலைக் கண்களுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள் என்பார்களே, அந்த நிலையில்தான் இருக்கிறார், தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளைக் கொஞ்சமும் அறியாமல் தமிழ்நாட்டின் ஆளுநர் பொறுப்பில் உள்ள மதிப்பிற்குரிய ஆர்.என்.ரவி அவர்கள்.** அருள்மிகு கோதண்டராமர் திருக்கோயில் அர்ச்சகர்களே, எவ்வித பயத்திற்கோ அடக்குமுறை உணர்வுக்கோ இடமில்லை என்று தெரிவித்துள்ள நிலையில், ஆளுநர் அலறுவதற்குக் காரணம் அரசியலன்றி வேறென்ன இருக்க முடியும்!

தமிழ்நாட்டில் எந்தக் கோயிலிலும் பக்தர்கள் வழிபாடு நடத்தலாம். தைப் பூச நாளில் முருகன் திருக்கோயில்களிலும், சித்திரைத் திருவிழாவில் அழகர் ஆற்றில் இறங்கும்போதும், திருவாரூர் ஆழித்தேரோட்டத்தின் போதும், கும்பகோணம் மகாமகம் திருவிழாவிலும், மயிலாப்பூர் கபாலீசுவரர் திருக்கோயில் அறுபத்து மூவர் திருவீதியுலாவிலும் ஆயிரமாயிரம் பக்தர்கள் உண்மையான பக்தியுடன் பங்கேற்பதையும், அவர்களுக்கு பிற மதத்தினரும் ஒத்துழைப்பு அளிப்பதையும் சமூகநீதிக் கொள்கை அடிப்படையிலான மதநல்லிணக்க நிலமாகிய தமிழ்நாட்டில் காணமுடியும். பா.ஜ.க. தன் தோளில் சுமக்கும் அயோத்தி இராமர் கோயில் அரசியலை, அமைதியான கோதண்டராமர் திருக்கோயிலில் போய் ஆளுநர் தேடியிருக்கிறார் என்றால் அவரிடம் இருப்பது பக்தியா, பகல் வேடமா?

**தமிழ்நாட்டின் உண்மையான பக்தர்கள், பக்தியை தங்களின் தனிப்பட்ட உரிமையாக, அகமகிழ்வாக, ஆன்மத் தேடலாகக் கொண்டவர்கள். அவர்கள் பெருமானையும் வழிபாடுவார்கள். பெரியாரின் தத்துவங்களையும் போற்றுவார்கள். பிற மதத்தினரையும் மதித்து நடப்பார்கள்.** இந்த அமைதியையும் நல்லிணக்கத்தையும் சீர்குலைக்கும் நோக்கில் பா.ஜ.க.வில் பல நிலைகளில் பொறுப்பு வகிப்பவர்களும் செயல்படுகிறார்கள். அவர்களின் தலையில் குட்டு வைப்பதுபோல உயர்நீதிமன்றம் கண்டனம் தெரிவித்திருப்பதை வரவேற்போம்.

சேலத்தில் நடந்த கழக **இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாட்டின் மகத்தான வெற்றி கண்டு அலறுகின்ற கழகத்தின் அரசியல் எதிரிகளும், தமிழ்நாட்டின் நிரந்தர எதிரிகளும் வதந்திகளைப் பரப்பி திசைதிருப்ப நினைத்தாலும், கழக உடன்பிறப்புகள் ஒவ்வொருவரும், வில்லில் தொடுக்கப்பட்ட கணை தனது இலக்கை மட்டுமே குறி வைப்பதுபோல செயல்படவேண்டும்.** மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்கள், பல்வேறு தலைப்புகளில் நடந்த சொற்பொழிவுகளில் சொல்லப்பட்டுள்ள கருத்துகளை முன்னெடுத்து, நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் மதவெறி பாசிச சக்திகளை முறியடிக்கும் பணியில் முனைப்பாகச் செயல்படுங்கள். நம் திராவிட மாடல் கொள்கையை இந்தியா முழுமைக்கும் கொண்டு செல்வோம். நாடாளுமன்றத் தேர்தலில் வெல்வோம்!

அன்புடன்

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2055
தை 08
22-01-2024.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 24-01-2024

# திசையைத் தீர்மானிக்கும் தீர்மானங்கள்!

திராவிட முன்னேற்றக் கழக வரலாற்றில் மட்டுமல்ல, தமிழ்நாட்டின் வரலாற்றிலும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்க வகையில் இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாட்டை எழுச்சியுடன் நடத்திக் காட்டி இருக்கிறார் இளைஞரணிச் செயலாளர் – மாண்புமிகு அமைச்சர் உதயநிதி அவர்கள். கழகத் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல, 'இனி இந்த இயக்கத்தை எந்தக் கொம்பனாலும் தொட்டுக் கூட பார்க்க முடியாது' என்ற அளவுக்கு நடந்திருக்கிறது இளைஞர் அணி மாநாடு.

'மாநில உரிமை மீட்பு மாநாடாக' நடத்திய மாண்புமிகு அமைச்சர் உதயநிதி அவர்கள், மாநாட்டில் முன்மொழிந்துள்ள 25 தீர்மானங்கள் இந்தியா செல்ல வேண்டிய திசையைத் தீர்மானிக்கும் தீர்மானங்களாக அமைந்துள்ளன.

**கடந்த பத்தாண்டு கால மக்கள் விரோத பா.ஜ.க. ஆட்சியில் பறிக்கப் பட்ட, தமிழ்நாடு உள்ளிட்ட இந்திய மாநிலங்களின் உரிமைகளை மீட்டெடுக்கும் ஜனநாயகப் பாதுகாவலராகத் திகழ்ந்து வரும் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள், இளைஞரணி மாநாட்டை மாநில உரிமை மீட்பு மாநாடாக நடத்த உத்தரவிட்டதே, இந்தியா முழுமைக்குமான செய்தியாக அமைந்துவிட்டது. அதனால்தான் தி.மு.க. சார்பில், தமிழ்நாட்டில் நடைபெற்ற மாநாடாக இருந்தாலும், அது இந்தியாவுக்கான மாநாடாக நடைபெற்றுள்ளது. இந்தியா முழுமைக்குமான தீர்மானங்களைத்தான் மாண்புமிகு உதயநிதி அவர்கள் முன்மொழிந்து நிறைவேற்றி உள்ளார்கள்.**

நீட் விலக்கை முன்னிலைப்படுத்துகிறது இளைஞரணி. குலக்கல்வி முறையைக் கொண்டு வரும் புதிய கல்விக் கொள்கைக்கு எதிராக நாடு தழுவிய போராட்டத்தை இளைஞர் நல அமைப்புகளுடன் இணைந்து முன்னெடுக்க இளைஞரணி முடிவெடுத்துள்ளது. கல்வி, மருத்துவத்தை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும் என்பதும் இன்னொரு முக்கியத் தீர்மானம் ஆகும். பா.ஜ.க.வால் அதிகம் சிதைக்கப்படுவது உயர் கல்வித் துறைதான். ஆளுநர்களை வேந்தர்களாக வைத்துக் கொண்டு இதனைச் செய்கிறார்கள். எனவேதான், பல்கலைக் கழகங்களின் வேந்தராக மாநில முதலமைச்சரே இருக்க வேண்டும் என்று கழக அரசு சட்டமுன்வடிவை நிறைவேற்றி அனுப்பி இருக்கிறது. அதற்கும் ஆளுநர் ஒப்புதல் வழங்காமல் இருக்கிறார். ஆளுநர்களை நிராகரிக்கும் சட்டத்துக்கும் ஆளுநர்தான் ஒப்புதல் வழங்க வேண்டும் என்று விதி இருப்பதை என்ன செய்வது? அதனால் தான், 'ஆளுநர் பதவியை நிரந்தரமாக அகற்றிடுக' என்று அமைச்சர் உதயநிதி அவர்கள் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்துள்ளார். நியமனப் பதவியில் இருப்பவர், இணை அரசாங்கம் நடத்துவதற்கு தடை செய்ய இந்தத் தீர்மானத்தை விட்டால் வேறு வழியில்லை.

**ஒன்றிய பா.ஜ.க. அரசு, தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசு நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்களில் தமிழ்நாட்டு இளைஞர்களின் வேலையை முற்றிலுமாக பறித்து விட்டது. ரயில்வே, தபால், வங்கி போன்ற துறைகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் அதிகம் இடம்பெற முடியவில்லை. இதனை வலியுறுத்தும் தீர்மானம், மிகமிக முக்கியமானது. காலப் போக்கில் மிகப்பெரிய பிரச்சினையாக மாறப் போகும் பிரச்சினையாக இது அமைந்துள்ளது.**

மாநிலங்களே இருக்கக் கூடாது என்பதுதான் பா.ஜ.க.வின் திட்டமாகும். ஒற்றையாட்சி கொண்ட நாடாக இந்தியாவை மாற்ற நினைகிறது பா.ஜ.க. இதனைத் தடுப்பதுதான் இன்று நம்முன் உள்ள முக்கியமான வேலைத் திட்டமாகும். மாநிலங்களை நகராட்சிகளைப் போல நடத்த நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் வல்லாதிக்கப் போக்கை மாநாடு கண்டித்துள்ளது. மாநிலங்களை யூனியன் பிரதேசங்களாக மாற்றுவதும், யூனியன் பிரதேசங்களின் தேர்தலே இல்லாமல் ஆக்குவதும்தான் பா.ஜ.க.வின் வேலையாகும். எனவேதான் மாநிலங்களை அதிகாரம் பொருந்தியவையாக மாற்றுவதும், அந்த மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்குவதும்தான் தி.மு.க. சொல்லும் மாற்றுத் திட்டம் ஆகும். 1970களில் தலைவர் கலைஞர் பேசியதை, இன்று பல்வேறு மாநில முதலமைச்சர்கள் பேசத் தொடங்கி இருப்பது இந்தியாவுக்கான நல்ல அறிகுறி ஆகும். கூட்டாட்சி அடிப்படையிலான இந்திய ஒன்றிய அரசு, சுயாட்சி மிக்க மாநில அரசுகள் இதுவே இளைஞரணியின் வழிகாட்டுதல்கள் ஆகும்.

**"இந்துக்களின் உண்மையான எதிரி பா.ஜ.க.தான் என்பதை அம்பலப்படுத்துவோம்" என்பது இளைஞரணியின் முக்கியமான தீர்மானம் ஆகும். "10 ஆண்டு கால ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல், தனது வாக்குறுதிகள் அனைத்திலும் தோல்வியடைந்த பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு, மக்களுக்குச் செய்த துரோகங்களை மறைக்க, மதவாத அரசியலை முன்னெடுத்து, அயோத்தி இராமர் கோவிலை வைத்து வாக்குகள் பெற்றுவிடலாம் என நினைப்பது ஆன்மிகவாதிகளையும் ஏமாற்றும் செயலாகும். நாட்டில் உள்ள இந்துக்களில் பெரும்பான்மையான மக்களை 10 ஆண்டு காலமாக ஏமாற்றிவிட்டு, இராமர்கோவிலைக் காட்டி, இந்துக்கள் ஓட்டுகளை வாங்கி விடலாம் என அரசியல் கணக்குடன், கடவுளையும் ஏமாற்ற நினைக்கும் இந்து மக்களின் உண்மையான எதிரியான பா.ஜ.க.வின் மதவாத அரசியலை வீடு வீடாக அம்பலப்படுத்தும் பரப்புரையை இளைஞர் அணி மேற்கொள்ளும்" என்ற தீர்மானத்தின் ஒவ்வொரு சொல்லும் அழுத்தமானது ஆகும். கோடிக்கணக்கான மக்களை அனைத்து வகையிலும் நசுக்கிவிட்டு, கோயிலைக் காட்டி திசை திருப்பும் பா.ஜ.க.வின் தந்திரத்தை இந்தத் தீர்மானம் அம்பலப்படுத்துகிறது. இந்தத் தீர்மானத்தைதான் வட மாநில மக்கள் மனதிலும் விதைத்தாக வேண்டும். அதுதான் காலத்தின் கட்டாயம் ஆகும்.**

"தமிழ்நாட்டில் நாம் வெற்றி பெற்றுவிடுவோம். நாற்பதுக்கு நாற்பதை வென்று விடுவோம். ஆனால் இந்தியா முழுக்க வெற்றி பெற வேண்டுமானால் இளைஞரணியினர் வடக்கு நோக்கியும் செல்ல வேண்டும்" என்று கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி அவர்கள் மாநாட்டில் பேசும்போது குறிப்பிட்டார்கள். 'இந்துக்களின் உண்மையான எதிரி பா.ஜ.க. தான்' என்பதை இந்தியா முழுமைக்கும் பரப்புரை செய்தாக வேண்டும்.

"கலவரத் தீயில் அரசியல் குளிர்காய்வதற்காக, மக்களை விறகுக் கட்டைகள் போல எரிக்கும் தன்மையுடன் ஒன்றிய பா.ஜ.க. அரசு செயல்படுகிறது" என்பதை இளைஞரணி மாநாட்டு தீர்மானங்கள் அம்பலப்படுத்தி இருக்கிறது. 'ஹிட்லர்களின் தோல்வி ஸ்டாலினிடம்தான்' என்ற வரலாற்று மரபின் தொடர்ச்சியை நிரூபிக்கும் வகையில், இந்திய ஒன்றியத்தில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திக் காட்டுவோம் என்றும் சூளுரைத்து இருக்கிறார்கள்.

**இந்தியா செல்ல வேண்டிய திசையைத் தீர்மானித்துள்ளது தீர்மானங்கள். இதனை வென்று காட்டுவார்கள் தி.மு.க. இளைஞரணியினர்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.01.2024) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம், பவானியம்மன் திருக்கோயில், விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர், அங்காள பரமேஸ்வரி திருக்கோயில், கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை, மாசாணியம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தைக் காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்புப் பணி அலுவலர் ஜெ. குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர் அ.சங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மதுரையில் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டிற்கு பெருமை சேர்க்கும்

# கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கம்!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று துவக்கி வைக்கிறார்!

மதுரை, ஜன. 24 -

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே கீழக்கரை கிராமத்தில் இயற்கை எழில் கொஞ்சம் வகுத்துமலை அடிவாரத்தில் உலக தரம் வாய்ந்த இந்தியாவிலேயே எங்கும் இல்லாத வகையில் 66 ஏக்கர் பரப்பளவில் ரூபாய் 66 கோடியில் தமிழர்களின் பாரம்பரியமிக்க வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டியை நடத்த தனி மைதானமாக கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கம் இன்று (24ஆம் தேதி) கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து ஜல்லிக்கட்டு விளையாட்டு போட்டியை துவக்கி வைக்கிறார்கள்.



தமிழர்களின் பாரம்பரியமிக்க வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு என்றாலே மக்கள் மனதில் நினைவில் வருபவர் தலைவர் கலைஞர்தான் ஜல்லிக்கட்டு மீதான சோதனை காலத்தில் எல்லாம் முன்னின்று அதனை மீட்டு கொடுத்தவர் தலைவர் கலைஞர்தான் என்பதை நாடே அறியும்.

பெருமைமிக்க தமிழர்களின் பாரம்பரியமிக்க வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டியை உலக அளவில் மேலும் பெருமை சேர்க்கும் வகையிலும், உலகத் தமிழர்கள் எல்லாம் மகிழ்ச்சி கொள்ளும் வகையிலும் இந்தியாவில் வேறு எங்கும் இல்லாத வகையில் உலகத்தரம் வாய்ந்த வகையில் ஜல்லிக்கட்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்த பிரமாண்டமான அரங்கம் அமைக்கப்படும் என கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 2022 ஆம் ஆண்டு சட்டப்பேரவையில் அறிவித்தார்.

அதைத் தொடர்ந்து மதுரையில் இருந்து சுமார் 25 கிலோ மீட்டர் தூரத்திலும், அலங்காநல்லூரில் இருந்து ஐந்து கிலோ மீட்டர் தூரத்திலும் கீழக்கரை என்ற கிராமத்தில் இயற்கை எழில் கொஞ்சும் வகுத்துமலை அடிவாரப் பகுதியில் சுமார் 66 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு கடந்த 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இதற்கான பணிகள் துவங்க ப்பட்டன.

நாள்தோறும் பணிகள் குறித்து கழகத் தலைவர் முதல்வர் அவர்கள் கேட்டறிந்து பணிகளை துரிதப்படுத்தினார், இதே போல் கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் பணிகள் குறித்தும் கேட்டறிந்தார்.

மேலும் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மற்றும் அதிகாரிகள் நேரில் ஆய்வு செய்து பணிகளை துரிதப்படுத்தினார்கள்.

கட்டுமான பணிகள் குறிப்பிட்ட காலத்தில் நடந்து முடிந்தது. பிரமிக்க வைக்கும் பிரமாண்டமான கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கம் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை என்று எல்லோரும் வியந்து பாராட்டும் வகையில் சர்வதேச தரத்துடன் காட்சியளிக்கிறது.

சுமார் 66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட இந்த அரங்கத்தில் முன்பாக பூங்காவின் நடுவில் தமிழர்களின் வீர விளையாட்டை நினைவு கூரும் வகையில் இளைஞர் ஒருவர் காளையை அடக்குவது போன்ற கம்பீரமான சிலை அமைக்கப்பட்டுள்ளது. அரங்கத்தில் மூன்று நுழைவுவாயில் அமைக்கப்பட்டு பிரதான நுழைவாயில் வழியாக வி.ஐ.பி.க்கள் மற்றும் பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

உள்ளே நுழைந்தவுடன் ஜெர்மன் வகை பூக்கள், தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு குறித்து படம்பிடித்து காட்டும் வகையில் வண்ண ஓவியக் காட்சியும், கலாச்சார ஓவியங்கள் பிரமிக்க வைக்கும் வகையில் அமைந்துள்ளது. இதுபோன்று மூன்று நுழைவுவாயில் வழியாகவும் பார்வையாளர்கள் எளிதாக உள்ளே சென்று பார்வையாளர் மாடத்தை அடையும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பின்னர் பிரத்யேகமாக அமைக்கப்பட்ட வாடிவாசல் வழியாக வரிசையாக வந்து காளைகள் அவிழ்த்து விடப்படும். வாடிவாசல் பார்வையாளர்களை வசீகரிக்கும் வகையில் காளைகளுக்கும் காளையின் உரிமையாளர்களுக்கும் சிரமம் இன்றி விளையாட்டு களத்திற்கு செல்லும் வகையிலும் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது.

ஜல்லிக்கட்டு விளையாட்டு மைதான கேலரியில் சுமார் 5,000 பேர் இலவசமாக பார்க்கவும், எளிதாக கேலரிக்கு வரவும் மாடிப்படிகள் மற்றும் பின் தூக்கி வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அரங்கத்தில் 'ஏறு தழுவுதல்' என்ற பெயரில் அருங்காட்சியகம், ஜல்லிக்கட்டு பாரம்பரிய வரலாறு குறித்து அருங்காட்சியகமும், பொருட்காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் அதிநவீன வசதிகளுடன் கூடிய 100 பேர் அமர்ந்து பார்க்கக்கூடிய ஜல்லிக்கட்டு மினி தியேட்டர், முக்கிய பிரமுகர் தங்கக்கூடிய சிறப்பு வசதிகளுடன் கூடிய அறைகள், பத்திரிகையாளர், ஒளிப்பதிவாளர்கள் காத்திருப்பு அறைகள் ஜல்லிக்கட்டு விளையாட்டுப் போட்டியை வி.ஐ.பி.கள் மற்றும் வெளிநாட்டவர் பார்க்கக் கூடிய வகையில் இருக்கைகள் என பல்வேறு சிறப்பு அம்சங்களுடன் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மேலும் காளைகள் சிதறி ஓடி காளை உரிமையாளர்களை சிரமப்படுத்துவதை தடுக்கவும் காளைகள் பாதிக்கப்படுவதை தடுக்கவும் கலெக்சன் பாயிண்ட் அமைக்கப்பட்டுள்ளது மேலும் மாடுபிடி வீரர்கள் மருத்துவ வசதி பெற்ற தனி மருத்துவமனை, காளைகள் மருத்துவ வசதி பெற தனி கால்நடை மருத்துவமனை அமைக்கப்பட்டுள்ளது.

குடிநீர் வசதிக்காக இரண்டு 50 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை மற்றும் கீழ் நிலை நீர் தேக்க தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளது. அதே போன்று அனைத்து வசதிகளுடன் கூடிய கழிப்பறை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது மேலும் வாகன நிறுத்துமிடமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அரங்கத்திற்கு வந்து செல்ல அகலமான சாலை வசதிகள் செய்யப்பட்டுள்ளது. உலக தரமிக்க வேலைப்பாடுகளுடன் சுமார் 66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தை இன்று (24ஆம் தேதி) கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டியை துவக்கி வைக்க உள்ளார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நாள்தோறும் நேரில் பார்வையிட்டு அதிகாரிகளுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி வருகிறார்.

மேலும் விழாவிற்கு வரும் முதல்வருக்கு சிறப்பான வரவேற்பு கொடுப்பதற்கும் மதுரை மாவட்ட தி.மு.க. சார்பில் உரிய ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது.

## டாவோஸில் உலகப் பொருளாதார மன்றத்தின் 54வது வருடாந்திர கூட்டம்!

# தமிழ்நாடு அரசு, தனது பங்களிப்பை வெற்றிகரமாக பதிவு செய்தது!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் பிரதிநிதிகள் குழு பங்கேற்பு!

பெர்ன், ஜன. 24 -

சுவிட்சர்லாந்து - டாவோஸில் உலகப் பொருளாதார மன்றம் - 2024 என்பது தமிழ்நாடு பிரதிநிதிகள் குழுவின் வெற்றியை குறிக்கிறது.

"நம்பிக்கை மீட்டெடுப்பு" ( rebuilding trust ) என்ற கருவோடு நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றத்தின் (WEF) 54வது வருடாந்திர கூட்டம் 2024 இல் தமிழ்நாடு அரசு தனது பங்களிப்பை மிக வெற்றிகரமாக பதிவு செய்துள்ளது.

தமிழ்நாடு அரசின் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் தொழில்துறை, முதலீட்டுத் துறை அமைச்சர் டாக்டர் டி.ஆர்.பி. ராஜா, முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக செயலாளர் அருண் ராய், வி.விஷ்ணு and CEO of Guidance Tamil Nadu அவர்கள் ஆகியோர் உலகளாவிய கூட்டாண்மைகளை வளர்ப்பதற்கும் தமிழ்நாட்டின் அர்ப்பணிப்பு மற்றும் தனித்துவமான ஆட்சிமுறையை வெளிப்படுத்தவும் டாவோசில் திராவிட மாடல் அரசின் மாதிரிகளை காட்சிப்படுத்தினர்.

உயர்மட்ட உலகளாவிய நிறுவனங்கள் மற்றும் அரசாங்கங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்புகள், பேச்சு வார்த்தைகள், நெட்வொர்க்கிங் நிகழ்வுகள் மற்றும் உடனடி நேர் காணல்கள் போன்ற 50க்கும் மேற்பட்ட கலந்துரையாடல்களில் பிரதி நிதிகள் குழு ஈடுபட்டுள்ளது.

பிரதிநிதிகள் குழு சந்தித்த குறிப்பிடத்தக்க நிறுவனங்கள் Rockwell Automation, Vestas, Valeo, SwissRe, Mitsubishi Electric, HP, Accenture, Schneider Electric, Maersk, Hitachi Energy, Geox போன்ற பல நிறுவனங்களை சந்தித்தன. மேலும் IT, Automobile, Renewables, Electronics, GCC, Investment Funds, Footwear, Healthcare, and Life Sciences. , போன்ற பல்வேறு துறைகள் சார்ந்த பிரதிநிதிகளையும் சந்தித்தனர்.

டாக்டர் டி.ஆர்.பி. ராஜா கூறுகையில், "WEF 2024 இல் எங்கள் பங்கேற்பு என்பது உலகப் பொருளாதாரப் பாதையில் தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பாதையை இணைத்து சீரமைக்க இந்தச் சந்திப்புகள் ஒரு முக்கிய அடியாக இருக்கும், இந்த புதிய உறவுகளை மேம்படுத்துவதற்கு நாங்கள் கடமைப் பட்டுள்ளோம் என்றும் மேலும் இச்சந்திப்பு பல்வேறு துறைகளில் மாநிலத்தின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும்" எனவும் கூறினார்.

அருண் ராய் கூறுகையில், இந்த பிரதிநிதிகள் குழுவின் முக்கியமான நோக்கமாக "புதிய உறவுகளை உருவாக்குவதும், ஏற்கனவே உள்ள உறவுகளை வலுப்படுத்துவதாகவும் இருந்தது, மேலும் முதலீட்டிற்காக வளர்ந்து வரும் துறைகளை ஆராய்ந்து புதுமையான சிந்தனைகளை சேகரிக்கவும், வணிகத் தலைவர்கள் மற்றும் CXO க்களுடன் இருதரப்பு சந்திப்புகள் மூலம் தமிழ்நாட்டை பொருளாதாரத்தில் உயர்த்துவதாகும். இனி வரும் மாதங்களில் தமிழ்நாடு முதலீட்டாளர்களுக்கான சிறந்த இடமாக இருக்கும்" எனவும் கூறினார்.

தமிழ்நாடு நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி வி. விஷ்ணு கூறுகையில், மாநிலத்தில் புதிய முதலீடுகளுக்கான பல வலுவான வழிகளை நாங்கள் உருவாக்கினோம், மேலும் வரவிருக்கும் மாதங்களில் வழக்கமான பின்தொடர்தல்கள் மூலம் முதலீடுகளை பாதுகாப்போம் எனவும் நம்பிக்கை உள்ளது என கூறினார்.

செயல்பாட்டு மையமாக திகழும் தமிழ்நாடு பெவிலியன் இரண்டு நிறைவான நிகழ்வுகளை நடத்தியது R&D, புத்தாக்கம் மற்றும் அறிவுப் பொருளாதாரம் ஆகியவற்றின் கூட்டாண்மையில் கவனம் செலுத்துகிற இந்தியாஸ் போரா, சுவிஸ் இந்தோ சேம்பர் போன்ற முக்கிய அமைப்புகளுடன் வர்த்தகம், PwC மற்றும் முன்னணி நிறுவனங்கள். மேலும் பெவிலியனில் பொங்கல் விழாவும் நடைபெற்றது.

பிரதிநிதிகள் குழு தலைமையில் நடைபெற்ற முக்கிய பேச்சு அமர்வுகளில் Qualcomm, Analog Device, Hitachi, Borgwarner, RGP Group போன்ற நிறுவனங்களுடன் உற்பத்தியின் எதிர்காலம் குறித்து பலகட்ட விவாதங்கள் இடம்பெற்றன. "SMEகள் மூலம் உலகளாவிய பொருளாதாரங்களை வலுப்படுத்துதல்" என்ற கருத்தின் அடிப்படையில் இக்குழு ஆய்வு செய்தது. பொது - தனியார் கூட்டாண்மை மாதிரிகள் மேம்பட்ட நிலையில் SME களை ஆதரிக்கவும் உற்பத்தி மற்றும் "புதியதில் போட்டித்தன்மைக்கான பாதைகளை வகுக்கவும் நுண்ண றிவுடன் இந்தச் சந்திப்பை அணுகியது" பிரதிநிதிகள் குழு.

இந்த ஆண்டு WEF என்பது நம்பிக்கை, வெளிப்படைத்தன்மை நிலைத்தன்மை, மற்றும் பொறுப்புக்கூறல் - நெருக்கமாக இணைந்த கொள்கைகள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

மேலும் அனைவரையும் உள்ளடக்கிய தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான தொலைநோக்குப் பார்வையாகும்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.1.2024) தலைமைச் செயலகத்தில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை சார்பில், சிறிய அளவிலான ஜவுளிப்பூங்கா திட்டத்தின் கீழ் 6 சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்களுக்கு திட்ட ஒப்புதல் ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ், துணிநூல் துறை ஆணையர் முனைவர் மா.வள்ளலார், கைத்தறி துறை ஆணையர் கே.விவேகானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.1.2024) தலைமைச் செயலகத்தில், ஜவுளி தொழில் முனைவோர்களுக்கான அரசு மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 17 தொழில் நிறுவனங்களுக்கு 10 விழுக்காடு கூடுதல் மூலதன முதலீடு மானியத்தொகையாக 9.25 கோடி ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ், துணிநூல் துறை ஆணையர் முனைவர் மா. வள்ளலார், கைத்தறி துறை ஆணையர் கே.விவேகானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (22.1.2024) தலைமைச் செயலகத்தில், ஹுண்டாய் மோபிஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் பார்க் கி சுல், மூத்த பொது மேலாளர்கள் கிம் பியுங் கியு, செந்தில் ராஜ்குமார், மனிதவள தலைவர் எஸ்.பிரேம் சாய் ஆகியோர் சந்தித்து மிக்ஜாம் புயல் மற்றும் தென் மாவட்டங்களில் பெய்த அதி கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 2 கோடியே 25 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்ளார்.

# நாடாளுமன்றத் தேர்தல் 2024

# தலைமைக் கழக அறிவிப்பு

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், நேற்று முன்தினம் (22-01-2024) மாலை 5 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், முரசொலி மாறன் வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது. இதில் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜனவரி 21 அன்று சேலத்தில் நடைபெற்ற தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில் எழுச்சியுரையாற்றும்போது தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகளான பொறுப்பு அமைச்சர்கள், மாவட்ட/ பகுதி/ ஒன்றிய/ நகர/ பேரூர் கழகச் செயலாளர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், மாநகராட்சி மேயர், துணை மேயர் மற்றும் மண்டலக்குழுத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள், நகர்மன்றத் தலைவர்கள், ஒன்றியக்குழுத் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள் உள்ளிட்ட "நிர்வாகிகள் சந்திப்பு" கீழ்க்கண்ட அட்டவணைப்படி. சென்னை, அண்ணா சாலை, "அண்ணா அறிவாலயத்தில்" நடைபெறும்.

| தேதி | நேரம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 24.01.2024 | மாலை 3.00 மணி | கிருஷ்ணகிரி, திருவள்ளூர் |
| 27.01.2024 | காலை 9.00 மணி | பொள்ளாச்சி, கோவை |
| | மாலை 3.00 மணி | நீலகிரி, திருப்பூர் |
| 28.01.2024 | காலை 9.00 மணி | நாமக்கல், ஈரோடு |
| | மாலை 3.00 மணி | சேலம், தருமபுரி |
| 29.01.2024 | காலை 9.00 மணி | சிவகங்கை, விருதுநகர் |
| | மாலை 3.00 மணி | தென்காசி, திருநெல்வேலி |
| 30.01.2024 | காலை 9.00 மணி | தூத்துக்குடி, கன்னியாகுமரி |
| | மாலை 3.00 மணி | மதுரை, தேனி |
| 31.01.2024 | காலை 9.00 மணி | இராமநாதபுரம், கடலூர் |
| 01.02.2024 | காலை 9.00 மணி | சிதம்பரம், மயிலாடுதுறை |
| | மாலை 3.00 மணி | நாகப்பட்டினம், தஞ்சாவூர் |
| 02.02.2024 | காலை 9.00 மணி | வேலூர், அரக்கோணம் |
| | மாலை 3.00 மணி | விழுப்புரம், கள்ளக்குறிச்சி |
| 03.02.2024 | காலை 10.00 மணி | வடசென்னை, தென் சென்னை |
| | மாலை 3.00 மணி | மத்திய சென்னை, திருபெரும்புதூர் |
| 04.02.2024 | காலை 9.00 மணி | திருவண்ணாமலை, ஆரணி |
| | மாலை 3.00 மணி | பெரம்பலூர், திருச்சி |
| 05.02.2024 | காலை 9.00 மணி | கரூர், திண்டுக்கல் |
| | மாலை 3.00 மணி | காஞ்சிபுரம், புதுச்சேரி |

குறிப்பு: அந்தந்த நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகள் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பாகவே அரங்கத்திற்குள் வந்து அமர்ந்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 22.1.2024

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## அனைத்து மாவட்டங்களுக்கான பரவலாக்கப்பட்ட வளர்ச்சி!

# திராவிட மாடல் அரசின் அணுகுமுறை பலனளிக்கத் தொடங்கியுள்ளது!

## 'தி டைம்ஸ் ஆப் இந்தியா' வெளியிட்டுள்ள செய்தியை சுட்டிக்காட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஜன.24-**

**'அனைத்து மாவட்டங்களுக்குமான பரவலாக்கப் பட்ட வளர்ச்சி' என்ற திராவிட மாடல் அரசின் அணுகுமுறை பலனளிக்கத் தொடங்கியது குறித்த 'தி டைம்ஸ் ஆப் இந்தியா 'நாளிதழின் செய்தி தொடர்பாகதமிழ்நாடுமுதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :**

தென் மாவட்டங்களின் வளர்ச்சி குன்றியுள்ளது என்ற நீண்டகாலத் தவிப்பு தீர்கிறது!

'அனைத்து மாவட்டங்களுக்குமான பரவலாக் கப்பட்ட வளர்ச்சி' என்ற நமது திராவிட மாடல் அரசின் அணுகுமுறை பலனளிக்கத் தொடங்கியதன்


SOUTHERN SUCCESS

THE TIMES OF INDIA
SOUTHERN SUCCESS

அடையாளமே இந்தச் செய்தி! இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில்

# 71 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜன.24-

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் ரூ.21.81 கோடி செலவிலான 16 நவீன நெல் சேமிப்புத் தளங்களைத் திறந்து வைத்து, 71 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.1.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 21 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 16 நவீன நெல் சேமிப்பு தளங்களை திறந்து வைத்தார். மேலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிக்காலத்தில் இயற்கை எய்திய 71 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 3 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

விவசாயிகளின் கடின உழைப்பில் உற்பத்தியாகும் நெல்லைக் கொள்முதல் செய்து அரவைக்கு அனுப்புவதில் ஒரு நெல் மணிகூட வீணாகக்கூடாது என்ற முதலமைச்சர் அவர்களின் ஆணைக்குச் செயல் வடிவம் கொடுத்திடும் வகையில், 2022-23-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் பத்து மாவட்டங்களில் பதினெட்டு இடங்களில் மொத்தம் 2,86,350 மெ.டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்பு தளங்கள் மொத்தம் ரூ.238.07 கோடி மதிப்பீட்டில் நிறுவ ஆணையிடப்பட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் 190 சேமிப்பு தளங்கள் முதலமைச்சர் அவர்களால் 11.02.2023 மற்றும் 25.04.2023 ஆகிய நாட்களில் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டன.

**16 நவீன நெல் சேமிப்பு தளங்களை திறந்து வைத்தல்**

அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் மயிலாடுதுறை மாவட்டம், எடமணல் கிராமத்தில் 21 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில் சாலை வசதிகளுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ள 16,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய 16 நவீன நெல் சேமிப்புத் தளங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள்!**

மழைக்காலங்களில் விவசாயிகளுடைய உழைப்பில் விளைந்த நெல்மணிகள் சேதமடையாமல் காத்திடும் வகையில் இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021லிருந்து இதுநாள் வரை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் மொத்தம் 219.92 கோடி ரூபாய் செலவில் 2.75 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 206 மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்பு தளங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிக்காலத்தில் இயற்கை எய்திய 71 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்கிடும் அடையாளமாக மூன்று நபர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்கள், சுமைதூக்கும் தொழிலாளர்கள் மற்றும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களால் வழங்கப்பட்ட ஒரு நாள் ஊதியமான ஒரு கோடியே ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு முதலமைச்சர் அவர்களிடம் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் ஆ.அண்ணாதுரை, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எஸ். பழனிச்சாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு

# திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஆட்டுக் கிடா முட்டு போட்டி!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பரிசுகள் வழங்கினர்!

திருச்சி, ஜன. 24-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருச்சி தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பாக ஆட்டுக்கிடா முட்டு போட்டி திருச்சி தஞ்சாவூர் நெடுஞ்சாலையில் காட்டூர் விக்னேஸ் நகர் பகுதியில் நடைபெற்றது.

இப்போட்டியில், தேனி, திண்டுக்கல், மதுரை, திருச்சி, கரூர், அரியலூர், பெரம்பலூர் உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து 60க்கும் மேற்பட்ட ஜோடி ஆட்டுக் கிடாக்கள் போட்டியில் கலந்துகொள்ள வந்திருந்தன. திருச்சி மாவட்டத்தில் கிடா முட்டு போட்டி நடத்தப்படுவது இதுதான் முதல் முறை என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

மாவட்ட துணை செயலாளர் அ.த.த. செங்குட்டுவன் தலைமையில், மாவட்ட, மாநகர நிர்வாகிகள் கோவிந்தராஜ், மூக்கன், லீலா வேலு குணசேகரன், நூர்கான், சந்திரமோகன், செல்லையா, சரோஜினி, தமிழ்ச்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். போட்டிக்கு சிறப்பு அழைப்பாளர்களாக கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி எம்.பி. மாவட்ட கழக செயலாளர், பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாநகர கழக செயலாளர் மு.மதிவாணன் ஆகியோர் கலந்துகொண்டு வெற்றி பெற்ற கிடாக்களின் உரிமையாளர்களுக்கு எல்.இ.டி. டிவி, கிரைண்டர், மிக்ஸி உள்ளிட்ட வீட்டு உபயோகப் பொருட்கள் பரிசாக வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மாவட்ட, மாநில, மாநகர நிர்வாகிகள் கே.என்.சேகரன், வண்ணை அரங்கநாதன், செந்தில், பகுதி கழகச் செயலாளர் நீலமேகம், சிவா மாவட்ட, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (22.1.2024) தலைமைச் செயலகத்தில், கேரள மாநில தொழில் துறை அமைச்சர் பி. ராஜீவ் சந்தித்துப் பேசினார். உடன் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.1.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 21 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 16 நவீன நெல் சேமிப்பு தளங்களை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் ஆ. அண்ணாதுரை, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எஸ். பழனிச்சாமி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மாற்றுத்திறனாளிகளுக்காக சிறப்பாக

# சேவை புரிந்தவர்கள் - சிறப்பு நிறுவனங்களுக்கு விருதுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜன.24-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.1.2024) தலைமைச் செயலகத்தில், மாற்றுத்திறனாளிகளுக்காக சிறப்பாக சேவை புரிந்தமைக்காக சிறந்த சமூக பணியாளர் விருது, சிறந்த நிறுவனத்திற்கான விருது, சிறந்த ஆசிரியருக்கான விருது, சிறந்த பணியாளர் / சுய தொழில் புரிபவருக்கான விருது, மாற்றுத்திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய நிறுவனத்திற்கான விருது, சிறந்த ஆரம்பநிலை பயிற்சி மைய ஆசிரியருக்கான விருது, மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய ஓட்டுநர் மற்றும் நடத்துனருக்கான விருது ஆகிய விருதுகளை விருதாளர்களுக்கு வழங்கி சிறப்பித்தார்கள்.

மாற்றுத்திறனாளிகளின் வாழ்வினை மேம்படுத்தும் வகையில், அவர்களது கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் அதிகம் கவனம் செலுத்தி வருவதோடு, மாற்றுத்திறனாளிகள் சமுதாயத்தில் சுய மரியாதையுடனும், சம உரிமையுடனும் வாழ, மாத பராமரிப்பு உதவித்தொகை ரூபாய்.2000/ என உயர்த்தி வழங்கியது, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் வாயிலாக மறுவாழ்வு இல்லங்கள் அமைப்பது போன்ற பல புதிய முன்னெடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதோடு மட்டுமல்லாமல், பொதுக் கட்டடங்களில் தடையற்ற சூழல் அமைப்பது, நவீன உதவி உபகரணங்கள் வழங்குவது போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

மாற்றுத்திறனாளிகளின் திறமைகளை ஊக்கப்படுத்தும் வகையிலும், தன்னம்பிக்கையை வளர்க்கும் வகையிலும், அவர்களை சமுதாயத்தில் ஒருங்கிணைக்கும் வகையிலும், ஒவ்வொரு ஆண்டும் மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பாக சேவைபுரிந்தவர்களுக்கும், சிறந்த நிறுவனங்கள் மற்றும் தடைகளை கடந்து சிறப்பாக பணியாற்றும் மாற்றுத்திறனாளிகளை ஊக்கப்படுத்தும் விதமாகவும் மாநில விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், மாற்றுத் திறனாளிகளுக்காக சிறப்பாக சேவை புரிந்தமைக்காக சிறந்த சமூக பணியாளர் விருதினை எ. மோகன் அவர்களுக்கும், சிறந்த நிறுவனத்திற்கான விருதினை தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி, ஆக்டிவ் மைண்ட்ஸ் தொண்டு நிறுவனத்திற்கும், சிறந்த ஆசிரியருக்கான விருதினை மனவளர்ச்சி குன்றியோருக்கு கற்பித்ததற்காக தி ஸ்பாஸ்டிக்ஸ் சொசைட்டி ஆஃப் திருச்சிராப்பள்ளி ஆசிரியர் அ. வாசுகி தேவி அவர்களுக்கும், செவித்திறன் குறைபாடுடையோருக்குக் கற்பித்தற்காக கிருஷ்ணகிரி - அண்ணா நகர், நகராட்சி நடுநிலைப்பள்ளி ஆசிரியர் ஜா.அருண்குமார் அவர்களுக்கும், பார்வைத்திறன் குறைபாடுடையோருக்குத் கற்பித்ததற்காக மதுரை, செயின்ட் ஜோசப் பார்வையற்றோர் பள்ளி ஆசிரியர் சகோதரி அ. பாக்கியமேரி அவர்களுக்கும்;

சிறந்த பணியாளர் / சுய தொழில் புரிபவருக்கான விருதினை கை, கால் பாதிக்கப்பட்டோர்/ தொழுநோய் குணமடைந்தோர் பிரிவில் திருமதி. எஸ். நீலாவதி (சிறந்த சுயதொழில் புரிபவர்), செ. சுதீஷ்குமார் (சிறந்த பணியாளர்), அறிவுசார் குறையுடையோர் பிரிவில் பா. முத்துக்குமார், செவித்திறன் பாதிக்கப்பட்டோர் பிரிவில் திருமதி. ரா. விஜயலெட்சுமி, பல்வகை மாற்றுத்திறனாளி பிரிவில் செல்வி. வி. சௌந்திரவள்ளி, மனநோயால் பாதிக்கப்பட்டோர் பிரிவில் திருமதி. இ. ஜாக்குலின் சகாயராணி, புற உலக சிந்தனையற்றோர்/ குறிப்பிட்ட கற்றலில் குறைபாடுடையோர் பிரிவில் ஆ.பிரேம்சங்கர் ஆகியோருக்கும்;

மாற்றுத்திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய நிறுவனத்திற்கான விருதினை காஞ்சிபுரம் பச்சையப்பாஸ் சில்க்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கும், சிறந்த ஆரம்ப நிலை பயிற்சி மைய ஆசிரியருக்கான விருதினை செவித்திறன் குறைபாடுடையோருக்குக் கற்பித்ததற்காக காஞ்சிபுரம் தமிழ்நாடு அரசு செவித்திறன் குறையுடைய இளம் சிறார்களுக்கான இலவச ஆரம்ப பயிற்சி மைய ஆசிரியர் திருமதி எம். பாலகுஜாம்பாள் அவர்களுக்கும், அறிவுசார் குறையுடையோருக்கு கற்பித்ததற்காக கன்னியாகுமரி சாந்தி நிலையம் மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்பு பள்ளி ஆசிரியர் ஜெ. ஜெயசீலன் அவர்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய சிறந்த ஓட்டுநருக்கான விருதினை இ.சுந்தர் வேலு அவர்களுக்கும், சிறந்த நடத்துனருக்கான விருதினை ஏ.தர்சியஸ் ஸ்டீபன் அவர்களுக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விருதுகளை வழங்கி சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. கீதா ஜீவன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளர் திருமதி.ஜெயஸ்ரீ முரளிதரன், மாற்றுத்திறனாளிகள் நலத் துறை இயக்குநர்

கமல் கிஷோர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.





தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், நேற்று முன்தினம் (22–01–2024) மாலை 5.00 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், முரசொலி மாறன் வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டம் துவங்கிடும் முன்பு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செய்துவிட்டு கூட்டத்தை துவக்கினர். இதில், கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டு, நாடாளுமன்றத் தேர்தலுக்கான கழகப் பணிகள் குறித்து ஆலோசனை நடத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோ. மோகனதாசன்

**சனவரி 24 (2012)**



கழகம் ஆரம்பித்த காலத்தில், சீர்காழி வட்ட துணைச் செயலாளராகப் பொறுப்பு வகித்து, தொடர்ந்து கொள்ளிடம் ஒன்றியக் கழகத்தின் முதல் செயலாளராகவும், ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட துணைச் செயலாளராகவும், நாகை மாவட்டக் கழக அவைத்தலைவராகவும் – துணைச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.

பூம்புகார் தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றதோடு, கொண்டல் ஊராட்சி மன்றத் தலைவராகவும் – சீர்காழி ஒன்றிய பெருந்தலைவராகவும், கூட்டுறவு வங்கித் தலைவராகவும், சீர்காழி நிலவள வங்கித் தலைவராகவும், மாநில நிலவள வங்கி இயக்குநராகவும் பொறுப்பு வகித்தவர்.

“பல தியாகங்களைச் செய்து, பலமுறை சிறை சென்று, எந்தச் சூழ்நிலையிலும் என்பால் கொண்ட அன்பை மறவாமல் என்னோடு பாசத்தோடு பழகி வருகின்ற தம்பி” என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### பவானியம்மன் - அங்காளபரமேஸ்வரி அம்மன் - மாசாணியம்மன் உள்ளிட்ட

# மூன்று திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜன.24-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 22.01.2024 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறை சார்பில் திருவள்ளூர் மாவட்டம். பெரியபாளையம், பவானியம்மன் திருக்கோயில், விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி திருக்கோயில், கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை மாசாணியம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தைக் காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்.

இறையருள் பெறத் திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு உணவளிப்பதே அன்னதானத் திட்டமாகும். தற்போது இத்திட்டத்தில் 8 திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானமும், 756 திருக்கோயில்களில் மதிய வேளை அன்னதானமும் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் சுமார் 82,000 பக்தர்கள் பயன்பெறுவதோடு, இத்திட்டத்திற்காக ஆண்டுதோறும் 105 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது.

நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டமானது ஸ்ரீரங்கம், அரங்கநாத சுவாமி திருக்கோயில், பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் ஆகிய 2 திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்டு வந்த நிலையில், இந்த அரசு பொறுப்பேற்றபின், அத்திட்டத்தினை விரிவுப்படுத்திடும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 16.09.2021 அன்று திருச் செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், சமயபுரம், மாரியம்மன் திருக்கோயில், திருத்தணி, சுப்பிரமணிய சுவாமி திருக் கோயில் ஆகிய திருக்கோயில் களிலும், கடந்த 31.12.2022 அன்று இராமேசுவரம், இராமநாதசுவாமி திருக்கோயில், திருவண்ணா மலை, அருணாசலேசுவரர் திருக்கோயில் மற்றும் மதுரை மீனாட்சி சுந்தரேசு வரர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களிலும் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

2023-24-ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத் துறையின் மானியக் கோரிக்கையில், “நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் எட்டு திருக்கோயில்களில் நடைபெற்று வருகிறது. இத்திட்டமானது தற்போது விரிவு படுத்தப் பட்டு, திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், பெரியபாளையம் பவானியம்மன் திருக்கோயில், விழுப்புரம் மாவட்டம், மேல் மலையனூர், அங்காள பரமேஸ்வரி திருக்கோயில் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், ஆனைமலை மாசாணியம்மன் திருக்கோ யில் ஆகிய மூன்று திருக்கோயில்களில் நடைமுறைப்படுத்தப்படும்” என அறிவிக்கப்பட்டது.

அதன்படி பவானியம்மன் திருக்கோயில், அங்காள பரமேஸ்வரி திருக்கோயில் மற்றும் மாசாணி யம்மன் திருக்கோயில் ஆகிய மூன்று திருக்கோயில் களிலும் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின் கீழ், பக்தர்களுக்கு காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை அன்னதானம் வழங்கப்படும்.

திருக்கோயில்களில் தயாரிக்கப்படும் அன்னதானம் மற்றும் பிரசாதம் தரத்துடனும், சுகாதாரமான முறையிலும் தயாரிக்கப்படுவதை உறுதி செய்திட இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரப்படுத்துதல் ஆணையத்தால் வழங்கப்படும் உணவு தர பாதுகாப்புச் சான்றிதழை (BHOG) 523 திருக்கோயில்கள் பெற்று, இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், இந்து சமய அறநிலையத் துறை சிறப்புப் பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ. முரளீதரன், கூடுதல் ஆணையர் அ.சங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக, பெரியபாளையத்திலிருந்து சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ. கோவிந்தராஜன், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் டி. பிரபுசங்கர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோரும், ஆனைமலையிலிருந்து கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோரும், மேல்மலையனூரிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

### கடலூர் மேற்கு மாவட்டம் - நல்லூர் வடக்கு ஒன்றியம்

# பூலாம்பாடி எம். அழகப்பன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



கடலூர், ஜன.24-

கடலூர் மேற்கு மாவட்டம் நல்லூர் வடக்கு ஒன்றியம் பூலாம்பாடி ஊராட்சியைச் சார்ந்த எம். அழகப்பன் (வயது 73) உடல் நலக் குறைவினால் (22.01.2024) திங்கள் கிழமை நண்பகல் 12.10 மணி அளவில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும் கழகத்தினரும் உறவினர்களும் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த அன்னார் எம். அழகப்பன் பூலாம்பாடி கிளைக் கழக பிரதிநிதியாகவும் அவைத் தலைவராகவும் கடந்த 50 ஆண்டு காலமாக தீவிர கழகத் தொண்டனாக கழகப் பணியாற்றி வந்தார்.

அன்னாருக்கு மலர்க்கொடி என்ற மனைவியும் வேல்முருகன் என்ற மகனும் பரிமளா என்ற மகளும் மற்றும் பேரக் குழந்தைகளும் உள்ளனர்.

அன்னாரது இறுதி ஊர்வலம் நேற்று (23.01. 2024) அன்னாரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு பூலாம்பாடி சுடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.



சேலம் மத்திய மாவட்டம் ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில். தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் விழாவையொட்டி அழகாபுரத்தில் 500 பேர்களுக்கு நலத் திட்ட உதவிகளை மாவட்ட தி.மு.க. பொருளாளர். மு.கார்த்திகேயன் வழங்கினார் உடன் மாவட்ட துணைச் செயலாளர். ஜி. குமரவேல். மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் புவனேஸ்வரி முரளி, அழகாபுரம் முரளி மாநகர அமைப்பாளர் கார்பெட் மணி, மாவட்ட நிர்வாகிகள். பி.தேவதாஸ்.ஜி. தங்கம். .சி.காளியப்பன், ஏ.வடிவேல்.வி.இளங்கோ. மாநகர நிர்வாகிகள். சுகுமார், பாபு, ஆர். சூரியன், ஆசைதம்பி ஆகியோர் இருந்தனர்.

# சிங்கம் உலாவிய சேலத்து மண்ணில், இளைஞர் அணியின் ஈடிணையில்லா எழுச்சி மாநாடு!

## தமிழ் – ஆங்கில நாளேடுகளின் தகுதி மிக்க செய்தித் தலைப்புகள் இதோ காண்க!

**தினகரன்**

தெற்கில் விடியல் பிறந்திருப்பதைப் போல, விரைவில் நாடு முழுவதும் விடியல் பிறக்கும்.

5 லட்சத்துக்கும் அதிகமானோர் குவிந்தனர்.

தி.மு.க. இளைஞர் அணி மாநாடு: குலுங்கியது சேலம்!

**THE HINDU**

T.N. People will not vote for Narendra Modi in 2024 Lok Sabha election too.

**தினமணி**

40 தொகுதிகளிலும் ' இந்தியா' கூட்டணி வெற்றி பெறும்.

ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு மக்கள் பாடம் புகட்ட வேண்டும்.

**இந்து தமிழ் திசை**

அமையவிருக்கும் 'இண்டியா' கூட்டணி ஆட்சி; மாநிலங்களுக்கு உரிமைகள் வழங்கும் சட்டத்தை உருவாக்கும்.

**தினத் தந்தி**

கவர்னர் பதவியை நிரந்தரமாக அகற்ற வேண்டும்.

ஹிட்லர்களின் தோல்வி ஸ்டாலினிடம்தான்!

உங்களை என் மகனாக, கொள்கை வாரிசாகப் பார்க்கிறேன்; நாடாளுமன்றத் தேர்தலில் 'இந்தியா' கூட்டணி வெல்ல சூளுரைப்போம்!

இந்தியாவில் இதுவரை நடைபெறவில்லை; 5 லட்சம் பேர் கலந்து கொண்ட இளைஞரணி எழுச்சி மாநாடு!

ஒன்றிய அரசு தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது.

**THE TIMES OF INDIA**

Stalin unleashes critique on BJP's relief failure, Tamil identity threats.

**தீக்கதிர்**

இந்துக்களின் உண்மையான எதிரியான பா.ஜ.க.வை அம்பலப்படுத்துவோம்.

**DECCAN Chronicle**

Amend Constitution, Give autonomy to states.

**THE NEW INDIAN EXPRESS**

Centre's full - time job is to whittle away states's rights ; fighting for BJP - ruled states too.

**தினமலர்**

இந்தியாவில் ஒருகட்சி ஆட்சி இனி இருக்காது.

### சேலம் மாநாடு: செயற்கை நுண்ணறிவு மூலம்

# கலைஞர் வாழ்த்திய வீடியோ வைரல்!

சேலம், ஜன. 24 -

சேலத்தில் நடந்த இளைஞரணி மாநாட்டில், 1,500 டிரோன் ஷோ உள்பட பல்வேறு நவீன தொழில் நுட்ப நிகழ்ச்சிகள் பார்வையாளர்களின் கவனத்தை பெரிதும் ஈர்த்தது. இதற்கிடையே, மாநாட்டிற்கு மறைந்த தி.மு.க. தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் செயற்கை நுண்ணறிவு வசதியின் மூலம் வாழ்த்து சொல்வது போல், சமூக வலைதளங்களில் வீடியோ காட்சி வைரலானது.



அதில், திராவிட முன்னேற்ற கழகத்தின் இளைஞரணி 2வது மாநில மாநாடு நடைபெறுகிறது. கடந்த 10 ஆண்டுகால பா.ஜ. ஆட்சியில், மாநில உரிமைகள் பறி போய்விட்டது. கல்வி உரிமைகள், மொழி உரிமை, நீதி உரிமை, சட்ட உரிமை, மாநிலங்களின் உரிமையை ஒன்றிய அரசு அபகரிப்பு செய்கிறது. ஜனநாயக நெறி முறைகளை கொண்ட, ஜனநாயக பாசறையான தி.மு.க. அதை ஏற்றுக் கொள்ளக்கூடிய கட்சி அல்ல.

நெல்லையில் 2007ம் ஆண்டு தி.மு.க. இளைஞரணி மாநாடு, தம்பி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது. வெள்ளிவிழா மாநாடாக சிறப்பாக நடந்தது. அதில் அடுத்த தலைமுறையினரை கழகத்தில் சேர்க்க ஈர்த்தது. 1970ம் ஆண்டு தி.மு.க. மாநில மாநாடு திருச்சியில் நடத்தினேன். அதில் 5 முழக்கங்களை அறிமுகப்படுத்தினேன். அதில், 5வது முழக்கம் தான் மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்பதாகும். தற்போது 2024ம் ஆண்டு தேர்தலை எதிர்கொண்டுள்ள சூழ்நிலையில், கழக வீரர்களை தயார்படுத்தும் பயிற்சி பாசறையாக இந்த மாநாடு அமையும்.

தம்பி உதயநிதி தலைமையில், மாங்கனி மாவட்டமாம் சேலத்தில், 2வது மாநில மாநாடு நடக்கிறது. இது ஜனநாயகத்தையும், மாநில உரிமையையும் மீட்டெடுக்க உழைத்திடும். ஓயாமல் உழைத்திடும் நம்மை காக்க, மாநிலத்தை காக்க உழைக்கும் கண்மணிகள், நாட்டை காத்திட அழைக்கிறேன். நாற்பதும் நமதே, நாடும் நமதே. பெரியாரின் பேரனாய், அண்ணாவின் தம்பிக்கு தம்பியாய், எனது உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளாய் சேலத்திற்கு அழைக்கிறேன். சமத்துவம், சமுதாயம் காக்க மாநிலத்தின் நியாயமான உரிமைகளை மீட்கும் குரலை உயர்த்துவோம். மாநில உரிமைகளை மீட்டெடுப்போம். இரு வண்ண கொடியை உயர்த்தி பிடிப்போம்.

இவ்வாறு வீடியோவில் இருந்தது.

# சென்னையில் ஒருங்கிணைந்த இறுதி வாக்காளர் பட்டியல்!

சென்னை, ஜன. 24-

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, சென்னை மாவட்டத்தில் அடங்கியுள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான ஒருங்கிணைந்த இறுதி வாக்காளர் பட்டியலை மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ் ணன், நேற்று முன்தினம் (22.01.2024) ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் வெளியிட்டார்.

அத்துணைப் பட்டியல்கள் உடனான ஒருங்கிணைந்த இறுதி வாக்காளர் பட்டியல் நேற்று முன்தினம் (22.01.2024) வெளியிடப்பட்டுள்ளது. வாக்காளர் பட்டியல்கள் சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, உதவி ஆணையாளர் அலுவலகங்களிலும், வாக்குச்சாவடி மையங்களிலும் பொது மக்கள் பார்வையிடலாம். மேலும், www.elections.tn.gov.in என்ற இணையதள முகவரியிலும் பார்த்து கொள்ளலாம்.

கடந்த 27.10.2023 அன்று வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் சென்னை மாவட்டத்தினைச் சார்ந்த 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான மொத்த வாக்காளர்களது எண்ணிக்கை விவரம்

1. ஆண்கள்-19,01,911, 2. பெண்கள்-19,65,149, 3. இதரர் -1,118, மொத்தம் 38,68,178

2024ஆம் ஆண்டு சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம் தொடர்பாக 69,079 பெயர் சேர்த்தல் மனுக்கள் பொது மக்களிடமிருந்து பெறப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு :

1. ஆண்கள் - 32,774, 2.பெண்கள் - 36,255, 3. இதரர் - 50, மொத்தம் 69,079

மேற்படி பெறப்பட்ட படிவங்கள் மீது உரிய ஆணை பிறப்பிக்கபட்டு துணைப் பட்டியல்களில் பெயர்கள் சேர்க்கப்பட்ட வாக்காளர்களது எண்ணிக்கை 68,823 அதன் விவரம் கீழ்வருமாறு

1.ஆண்கள் 32,662 2. பெண்கள் 36,111, 3. இதரர்50, மொத்தம் 68,823.

வாக்குச்சாவடி நிலை அலுவலர்களது கள ஆய்வின் போது கண்டறியப்பட்ட இடம் பெயர்ந்தோர், காலமானோர் மற்றும் வாக்காளர் பட்டியல்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பதிவுகளில் இடம் பெற்றோர் மற்றும் வாக்காளர் பட்டியல்களில் பெயர் நீக்கம் செய்ய கோரி வரப்பெற்ற படிவம்-7ன் எண்ணிக்கை 49,482 ஆகும். அவற்றில் வாக்காளர் பதிவு அலுவலர்களது விசாரணைக்கு பின்னர் வாக்காளர் பட்டியல்களிலிருந்து பெயர்கள் நீக்கம் செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை 35,834 ஆகும். மேலும், எந்த பெயர்களும் தகுதியின்மை அடிப்படையில் தன்னிச்சையாக (SUO-MOTU) நீக்கம் செய்யப்படவில்லை.

மேலும், இவ்வாறு அனைத்து தொகுதிகளிலும் உள்ள வாக்காளர் பட்டியலிலிருந்து உரிய நடைமுறையை பின்பற்றி இறந்து போன, நிரந்தரமாக குடிபெயர்ந்தவர்கள் மற்றும் பலமுறை பட்டியலில் பதிவுகள் (REPEATED) ஆகிய பெயர்கள் தொடர் திருத்தம் மற்றும் சிறப்பு சுருக்கத் திருத்த காலங்களில் நீக்கம் செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை விவரங்கள்

1. ஆண்கள் 17,399, 2. பெண்கள்18,423, 3. இதரர் 12. மொத்தம் 35,834

மேற்குறிப்பிட்ட 35,834 நீக்கம் செய்யப்பட்ட பெயர்களில், 469 இறந்தவர்கள், 25,291 நிரந்தரமாக குடிப்பெயர்ந்தவர்கள் மற்றும் 10,074 பலமுறை பட்டியலில் பதிவு (REPEATED).

தற்போது வெளியிடப்பட்டுள்ள இறுதி திருத்தப் பட்டியலில் வாக்காளர்களது எண்ணிக்கை, கடந்த 27.10.2023 அன்று வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளர்களது எண்ணிக்கையினை விட 32,989 அதிகம் என்றும், இந்த எண்ணிக்கை வரைவு வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளர்களை விட 0.85 சதவீதம் அதிகம் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இந்த சிறப்பு சுருக்கமுறை திருத்தத்தில் பெயர்கள் சேர்க்கப்பட்ட வாக்காளர்களில் சிறப்பு சுருக்கத் திருத்தம் 2023 முதல் 18 வயது பூர்த்தியடைந்தவர்கள் எண்ணிக்கை 37,442 .

வாக்காளர் எண்ணிக்கை குறைந்தபட்சமாக எண் 18. துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் 1,72,624 வாக்காளர்களும், அதிகபட்சமாக எண்.26. வேளச்சேரி சட்டமன்றத் தொகுதியில் 3,08,462 வாக்காளர்களும் உள்ளனர்.



நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் நேற்று முன்தினம் (22.01.2024) சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. இராசா ஆகியோர் 479 பயனாளிகளுக்கு ரூ. 2.01 கோடி மதிப்பீட்டில் திருமண நிதியுதவியுடன் கூடிய திருமாங்கல்யத்திற்கு 3.08 கிலோ தங்கத்தினையும் வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு.அருணா, உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், உதகை நகர மன்றத் தலைவர் திருமதி.வாணீஸ்வரி, மாவட்டச் சமூக நல அலுவலர் திருமதி.பிரவீணா தேவி உட்பட பலர் உள்ளனர்.

### முத்தமிழறிஞர் கலைஞரின் உரை:

# அசத்திய சிறுமிக்கு நினைவுப் பரிசு வழங்கிய உதயநிதி ஸ்டாலின்!

சேலம், ஜன. 24-

சேலத்தில் நடைபெற்ற இளைஞரணி மாநில மாநாட்டில் யோகேஸ்வரி என்ற சிறுமிக்கு பேச வாய்ப்பு வழங்கப்பட்டது. செந்தமிழில் அவர் இளைஞரணியை வரவேற்று கவிதை வாசித்ததும், தொடர்ந்து, கலைஞரின் உரை முழக்கத்தை அச்சு பிசகாமல், பேசியதும் மாநாட்டில் பலத்த கரவொலியை எழுப்பியது. அப்போது மேடையில் இருந்த இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின், கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆகியோர் எழுந்து நின்று சிறுமியை மனதார பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர். இதேபோல், அமைச்சர்களும் பாராட்டினர். தொடர்ந்து உதயநிதி ஸ்டாலின் சிறுமிக்கு நினைவுப் பரிசை வழங்கி சிறப்பித்தார்.



## நாளை (ஜன.25) - மொழிப்போர்த் தியாகிகளுக்கு

# தமிழ்நாடு முழுவதும் வீரவணக்க நாள் பொதுக்கூட்டங்கள்!

## சென்னையில் முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின், ஆவடி - பொதுச்செயலாளர் துரைமுருகன், மன்னார்குடி - பொருளாளர் டி.ஆர்.பாலு, திருச்சி - முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு!









**இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம் - நீங்கள்**
**எல்லோரும் வாருங்கள் நாட்டினரே!**
**செந்தமிழுக்குத் தீமைவந்த பின்னும் - இந்தத்**
**தேகம் இருந்தொரு லாபமுண்டோ?**
**விந்தைத் தமிழ்மொழி எங்கள் மொழி! - அது**
**வீரத் தமிழ் மக்கள் ஆவி என்போம்!**

**சிங்கமென்ற இளங்காளைகளே - மிகத்**
**தீவிரங் கொள்ளுவீர் நாட்டினிலே!**
**பங்கம் விளைத்திடல் தாய்மொழிக்கே - உடற்**
**பச்சை ரத்தம் பரிமாறிடுவோம்!**

**-பாவேந்தர்**

- பெரும் சிறப்புப் பெற்ற நம் தாய் மொழியாம் தமிழ்மொழி, நீராலும் – நெருப்பாலும், வஞ்சகர்களின் வெறுப்பாலும் வெல்லமுடியாத – வீழ்த்த முடியாத செம்மாந்த மொழியாகும்! தத்தமது உரைநடையின் வாயிலாகவும், கவிதைத் தீரமுடனும் தமிழறிஞர்கள்பலர் தங்கள் விழியெனப் போற்றி வளர்த்த வண்டமிழ் மொழியாகும்.

- 1938ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் ஆட்சி புரிந்த மூதறிஞர் இராஜாஜி அவர்கள், தமிழ்நாட்டு மாணவர்கள் இனி இந்தி கட்டாயமாகக் கற்க வேண்டுமென்று அறிவிப்பினை எதிர்த்து, 27.02.1938 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்பு மாநாட்டில், தாய் மொழியைக் காக்க இந்தித் திணிப்பினை எதிர்க்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டு அதனடிப்படையில், தந்தை பெரியார், மறைமலை அடிகள், திரு.வி.க., நாவலர் சோமசுந்தர பாரதி, பேரறிஞர் அண்ணா போன்ற தமிழறிஞர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் தாய் மொழி காக்க களம் கண்டனர்.

அப்போது, 14 வயதே ஆன பள்ளி மாணவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், திருவாரூர் வீதியில் தன்னுடன் பயிலும் மாணவர்களை அணி திரட்டி, “கயல், வில், புலி” சின்னம் பொறித்த தமிழ்க் கொடியினை கையிலேந்தி,

**“ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள்! - நீ**
**தேடி வந்த கோழையுள்ள நாடிதல்லவே!”**

என்று, இந்தித் திணிப்பு எதிர்ப்பு போர்ப்பரணி பாடி, தமிழ்மொழி காக்கும் போர்வீரராய் முன்வந்தார்.

அன்னைத் தமிழ் காக்க, முதற்கட்ட இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு, சிறை சென்ற நடராசன் 15.01.1939 அன்றும்; தாளமுத்து 12.03.1939 அன்றும் வீர மரணம் அடைந்தனர். தமிழக மக்களின் தொடர் போராட்டத்தினால், அரசு 21.02.1940-ல் கட்டாய இந்தித் திணிப்பைக் கைவிடும் முடிவுக்கு வந்தது.

தாராளமாகவும் – ஏராளமாகவும் தமிழ்ச் சொற்கள் இருந்தும், பிறமொழிச் சொற்கள் கலந்து பேசியும், எழுதியும் தமிழுக்கு ஊறு விளைத்திட முனைந்தோர், முடிந்தளவு முயன்றும், ‘யாதொன்றும் புரிந்திட இயலாது’, என்று முடங்கிடும் நிலையில், என்றென்றும் மாறாத இனிமைத் தமிழுக்கு ஒன்றிய அரசால் ஆபத்து வரவிருந்தபோது,

**“செந்தமிழுக்கு தீங்கொன்று வந்துற்ற பின்னும் - இத்**
**தேகம் இருந்தென்ன லாபம்?”**

என, தனக்குத் தானே கேள்வி எழுப்பிக் கொண்ட அன்னைத் தமிழின் அருந்தவப் புதல்வர்களாம் - கீழுப்பழுவூர் சின்னச்சாமி, விருகம்பாக்கம் அரங்கநாதன், கோடம்பாக்கம் சிவலிங்கம், மாயவரம் சாரங்கபாணி, விராலிமலை சண்முகம், கீரனூர் முத்து, பீளமேடு தண்டபாணி, சத்தியமங்கலம் முத்து, அய்யம்பாளையம் ஆசிரியர் வீரப்பன் தீக்குளித்தும், துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் ராஜேந்திரன் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோரின் தீரத்தை நினைவு கூர்ந்திடும் நாள்தான், வருகிற 25.01.2024 மொழிப் போர்த் தியாகிகள் நினைவு தினம் ஆகும்.

உலக வரலாற்றில், நாட்டின் விடுதலைக்காக, இனப் போராட்டத்திற்காக தங்களை மாய்த்துக் கொண்டோர் நிரம்ப உண்டு. ஒரு மொழிக்காக, தங்களது வாழ்க்கையையே சுருக்கிக் கொண்டு – கருகியவர்கள் உண்டு என்றால், அது தமிழ் மக்களையே சாரும்.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் வழியில் வந்த நமது கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள், 1972ஆம் ஆண்டு கோவையில், தி.மு.க. மாணவரணியின் சார்பில் நடைபெற்ற மாநாட்டில் உரையாற்றுகின்ற போது…

“மொழிக்காக – நம்முடைய இனத்திற்காகப் போராடுகிறோம். போராடுகிற நேரத்திலே நம்முடைய உயிரை இழக்கிற தியாகத்தைச் செய்வதற்குக் கூடக் காத்திருக்கிறோம். என்னுடைய தந்தைக்கு நான்கு ஆண் பிள்ளைகள் இருக்கிறார்கள். எனவே, அந்த நான்கு ஆண்பிள்ளைகளில் ஒரு ஆண்பிள்ளை போய் விடுவதால் என்னுடைய தந்தை நிச்சயமாக கவலைப்பட மாட்டார். அதுவும், ‘மொழிக்காக, ஒரு இனத்திற்காக தனயனை இழந்த தந்தை’ –என்று என்னுடைய தந்தைக்குப் பாராட்டுக் கிடைக்கும். பாராட்டுகின்ற பெருமையை வாங்கித் தந்த மகிழ்ச்சி எனக்குச்சேரும் அல்லவா?”

–என்று வீர உரையாற்றி, தமிழ் மொழிக்காக தனது இன்னுயிரையும் துறப்பது எனக்குப் பெருமை உடையது என, தனது 18–வது வயதில் சபதமேற்று; இன்றும் தமிழ் மொழிக்கான அனைத்துப் போராட்டங்களிலும் தலைமகனாக விளங்குகிறார்.

‘இந்தி பேசாத மக்களின் மீது இந்தியைத் திணித்தே தீருவேன்’ என்று ஒன்றியத்தில் ஆட்சி நடத்தும் பாசிச பா.ஜ.க. அரசும், அதன் தலைவர்களும் அனைத்து வழிகளிலும் இந்தியைத் திணிப்பதற்கான முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர். தமிழ்நாட்டுக்கு வந்தால், ‘தொன்மையான மொழி தமிழ்’ என்று நாக்கில் தேன் தடவுவதும், டெல்லிக்குச் சென்றதும் நஞ்சைப் பரப்புவதும் அவர்களுக்கு வாடிக்கையாகி விட்டது.

ஒன்றிய அமைச்சர் அமித்ஷா அவர்கள் சமீபத்தில் நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில், “இந்திதான் நாட்டு மக்களை ஒன்றிணைக்கிறது - பிராந்திய மொழிகளுக்கு அதிகாரமளிக்கிறது” என்று இந்தித் திணிப்புக் கூச்சலின் மாற்று வடிவமாகப் பேசியதும், எதிர்ப்பின்றி அனைவரும் இந்தியை ஏற்றுக் கொள்ள வேண்டும் என தொடர்ந்து பேசுவதும் மற்ற மொழி பேசும் அனைத்து இன மக்களையும் இந்திக்குக் கொத்தடிமை ஆக்கும் எதேச்சாதிகார முயற்சிக்கு பல்வேறு இடங்களில் இருந்து கண்டனங்கள் வந்தது!

மேலும், ஒன்றிய பொதுத் துறை காப்பீட்டு நிறுவனமான “நியூ இந்தியா இன்சூரன்ஸ்” நிறுவனம், தனது ஊழியர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில், “இந்தியை கட்டாயம் படிக்க வேண்டும் - இந்திப் புத்தகங்களை வாங்க வேண்டும் - இந்தி திறனறிய சோதனைகளை நடத்த வேண்டும்” என நீண்டதொரு இந்தித் திணிப்புக் கான பட்டியலை சுற்றறிக்கை என்ற பெயரில் அனுப்பியதும்,

சமீபத்தில் கோவை விமான நிலையத்தில் மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படை வீரர் ஒருவர், தமிழ்நாட்டைச் சேர்ந்த பெண்ணிடம், இந்திதான் தேசிய மொழி, இது கூடத் தெரியாதா? என ‘கூகுள்’ செய்து பார்க்கச் சொல்லி வற்புறுத்தி மிரட்டிய அவல நிலையும்;

மத்திய பின்னிருப்புக் காவல் படையினருக்கான (சி.ஆர்.பி.எப்.) வேலை வாய்ப்பு அறிவிப்பில், தேர்வுகள் அனைத்தும் இந்தி மற்றும் ஆங்கிலத்தில் மட்டுமே நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டு, கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின் பேரில், மொழி உரிமையைக் காக்கவும், இந்தி பேசாத மக்களை தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்தும் தி.மு.க. இளைஞர் அணியும், மாணவர் அணியும் இணைந்து அறிவித்த கண்டன ஆர்ப்பாட்டத்தைக் கண்ட ஒன்றிய அரசு, 1965 மொழிப்புரட்சிக் காலம் மீண்டும் தமிழ்நாட்டில் உருவாகி விடுமோ என அஞ்சி, இத்தேர்வை இந்தி மற்றும் ஆங்கிலம் உள்ளிட்ட 13 பிராந்திய மொழிகளில் நடத்திடவும் ஒப்புக் கொண்டது!

எப்பொதெல்லாம் இந்தித் திணிப்பு தலை தூக்குமோ - அப்பொதெல்லாம் கழகத் தலைவரின் ஆணையேற்று, தி.மு.க. மாணவர் அணியின் புலிப் போத்துகள் சீறிப் பாய்ந்திடத் தயங்கியதில்லை.

இந்தியை எப்படியாவது பின்வாசல் வழியாக திணிக்கத் துடிக்கும் ஒன்றிய அரசு ஒன்றை உணர வேண்டும்; இந்தித் திணிப்புக்கு ஆதரவு தெரிவித்து கைக் கட்டி, வாய் பொத்தி அமைதி காக்க தமிழ்நாட்டில் நடப்பது அடிமைகளின் ஆட்சி அல்ல! பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் வழியில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நடத்தும் திராவிட மாடல் ஆட்சி!

இந்தியைத் திணிக்க முயன்றோருக்கும், முயல்வோருக்கும் அச்சத்தை உருவாக்கிவிட்டுச் சென்றுள்ள மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்திட, பொதுக்கூட்டங்கள் நடத்தி அவர்கள் கொண்டிருந்த தூய தமிழுணர்வுடன் நாமும் வாழ்ந்திட வேண்டும் என்ற சூளுரையை இந்நாளில் மேற்கொண்டிட, கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு முழுவதும் பட்டித்தொட்டி முதல் பட்டினக்கரை வரை, தி.மு.க. மாணவர் அணியின் சார்பில், கீழ்க்காணும் உரையாற்றுவோர் பட்டியல் வெளியிடப்படுகிறது.

**தமிழ் வாழ்க! தமிழர் வாழ்க!**
**தமிழ்நாடு வாழ்க! திராவிட மாடல் ஆட்சி வெல்க!**

**வீரவணக்கம்! வீரவணக்கம்!**
**மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கம்!**
**இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்!**
**ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்தே தீருவோம்!**
**தமிழை வளர்த்து தமிழரைக் காப்போம்!**

**தமிழ்நாடு முழுவதும் உரையாற்றுவோர் பட்டியல்:**

| | |
|---|---|
| அண்ணாநகர் | கழகத் தலைவர் – |
| | மாண்புமிகு **முதலமைச்சர்** அவர்கள். |
| ஆவடி | மாண்புமிகு. பொதுச் செயலாளர் |
| | **துரைமுருகன்** |
| | எஸ். ஜெகத்ரட்சகன், எம்.பி., |
| | சா.மு. நாசர், எம்.எல்.ஏ., |
| | சி. ஜெரால்டு |
| மன்னார்குடி | பொருளாளர் |
| | **டி.ஆர். பாலு, எம்.பி.,** |
| | மன்னை த. சோழராஜன் |
| திருச்சி | மாண்புமிகு. முதன்மை செயலாளர் |
| | **கே.என். நேரு** |
| | கரூர் முரளி |
| | அல்லூர் பி.எம். ஆனந்த் |
| ஆண்டிப்பட்டி | மாண்புமிகு. ஐ. பெரியசாமி |
| | நா. இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ., |
| | மீனாகண் இரமேஷ் |
| காஞ்சிபுரம் | முனைவர் க. பொன்முடி |
| | க. சுந்தர், எம்.எல்.ஏ., |
| | நா.சே. பிரபாகரன் |
| நாமக்கல் | ஆ. இராசா, எம்.பி., |
| | என். ராஜேஸ்குமார், எம்.பி., |
| | கம்பம் பாண்டிதுரை |
| தென்காசி | கனிமொழி கருணாநிதி, எம்.பி., |
| | என். ஜெயபாலன் |
| | நாகை மு. சாகுல் அமீது |
| மேட்டூர் | அந்தியூர். ப. செல்வராஜ், எம்.பி., |
| | டி.எம். செல்வகணபதி |
| | நெய்வேலி தங்கம் |
| உளுந்தூர்பேட்டை | ஆர்.எஸ். பாரதி |
| | தா. உதயசூரியன், எம்.எல்.ஏ., |
| | கோமல் விஜய் அறிவழகன் |
| காஞ்சிபுரம் | மாண்புமிகு **உதயநிதி ஸ்டாலின்** |
| வடக்கு மாவட்டம் | மாண்புமிகு தா.மோ. அன்பரசன் |
| இராணிப்பேட்டை | சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. |
| | மாண்புமிகு ஆர். காந்தி |
| | வழக்கறிஞர் எஸ்.எஸ்.ஆர்.சசிகுமார் |
| கும்மிடிபூண்டி | திருச்சி சிவா, எம்.பி., |
| | டி.ஜெ. கோவிந்தராஜன், எம்.எல்.ஏ., |
| | கதிர் மீனாட்சிசுந்தரம் |
| கடலூர் | டி.கே.எஸ்.இளங்கோவன் |
| | மாண்புமிகு. |
| | எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் |
| | ஆலங்குடி செல்வராஜ் |
| | எஸ்.எஸ்.ஆர். சசிக்குமார் |
| திருச்சி கிழக்கு | மாண்புமிகு. எ.வ. வேலு |
| மாநகரம் | மாண்புமிகு |
| | அன்பில் மகேஷ் பொய்யாமொழி |
| | ஒரத்தநாடு நடராஜன் |
| சேலம் | எஸ்.எஸ். பழனிமாணிக்கம், எம்.பி., |
| | ஆர். இராஜேந்திரன், எம்.எல்.ஏ., |
| | சேலம் இரா. தமிழரசன் |
| | ஆம்பூர் பொய்யாமொழி |
| திருவாரூர் | பொன். முத்துராமலிங்கம் |
| | பூண்டி கலைவாணன், எம்.எல்.ஏ., |
| | அ.வெ. அறவரசன் |
| தருமபுரி | மாண்புமிகு கு. பிச்சாண்டி |
| | தடங்கம் பெ. சுப்பிரமணி |
| | திருச்சி ராதாகிருஷ்ணன் |
| திருமங்கலம் | கடலூர் இள. புகழேந்தி |
| | மு. மணிமாறன் |
| | தீக்கனல் கருணாநிதி |
| சிவகங்கை | சுப. வீரபாண்டியன் |
| | மாண்புமிகு. கே.ஆர். பெரியகருப்பன் |
| | போடி கலைசெல்வன் |
| | பூர்ணசங்கீதா சின்னமுத்து |
| புதுச்சேரி | மாண்புமிகு ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் |
| | ஆர். சிவா, எம்.எல்.ஏ., |
| | லயோலா ராஜசேகர் |

தொடர்ச்சி 7 ஆம் பக்கம்

# தமிழ்நாடு முழுவதும் வீரவணக்க நாள் பொதுக்கூட்டங்கள்!

6-ஆம் பக்கத் தொடர்ச்சி


| | |
|---|---|
| அரியலூர் | மாண்புமிகு முனைவர் கோவி. செழியன் |
| | மாண்புமிகு எஸ்.எஸ். சிவசங்கர் |
| | சென்னை மதிவாணன் |
| வேலூர் | ப. தாயகம் கவி, எம்.எல்.ஏ., |
| | ஏ.பி. நந்தகுமார், எம்.எல்.ஏ., |
| | சிறுவனூர் பரசுராமன் |
| சங்கரன்கோயில் | எஸ். ஆஸ்டீன் |
| | ஈ. ராஜா, எம்.எல்.ஏ., |
| | குளித்தலை சலாவுதீன் |
| திண்டிவனம் | பூச்சி எஸ். முருகன் |
| | மாண்புமிகு. கே.எஸ். மஸ்தான் |
| | சென்னை உதயசூரியன் |
| பொன்னேரி | தஞ்சை கூத்தரசன் |
| | முனைவர். நா. சந்திரபாபு |
| | க. எழிலன் |
| அருப்புக்கோட்டை | க. வேங்கடபதி |
| | மாண்புமிகு |
| | கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமசந்திரன் |
| | வழக்கறிஞர் அ. கணேசன் |
| ஈரோடு | குத்தாலம் பி. கல்யாணம் |
| | மாண்புமிகு. சு. முத்துசாமி |
| | தூத்துக்குடி தமிழ்ப்பிரியன் |
| | ஜெ. வீரமணி |
| கள்ளக்குறிச்சி | தி.அ. முகமது சகி |
| | வசந்தம் கார்த்திகேயன், எம்.எல்.ஏ., |
| | இளந்தளிர் இளங்கோ |
| மதுரை | கம்பம் செல்வேந்திரன் |
| | கோ. தளபதி, எம்.எல்.ஏ., |
| | சேலம் ஜான்பாட்ஷா |
| | அதலை பி. செந்தில்குமார் |
| காரைக்குடி | பொள்ளாச்சி மா. உமாபதி |
| | ஆத்தூர் வெங்கடேசன் |
| திருப்பூர் | வழக்கறிஞர் இரா. கிரிராஜன், எம்.பி., |
| | க. செல்வராஜ், எம்.எல்.ஏ., |
| | கோவை. அ. திராவிடமணி |
| திருவள்ளூர் | திண்டுக்கல் ஐ. லியோனி |
| | திருத்தணி எஸ். சந்திரன், எம்.எல்.ஏ., |
| | புலவர் சாமிநாகப்பன் |
| திருப்பத்தூர் (வேலூர்) | முனைவர் சபாபதி மோகன் |
| | உடுமலை தண்டபாணி |
| இராமநாதபுரம் | கவிச்சுடர் கவிதை பித்தன் |
| | காதர்பாட்ஷா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ., |
| | ஆக்காட்டி ஆறுமுகம் |
| விழுப்புரம் | வாகை சந்திரசேகர் |
| | நா. புகழேந்தி, எம்.எல்.ஏ., |
| | அன்னவயல் கணேசன் |
| கோயம்புத்தூர் | மாண்புமிகு முனைவர் |
| | பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் |
| | நா. கார்த்திக் |
| | தா. ஆதித்தன் |
| | வி.ஜி. கோகுல் |
| விருதுநகர் | முனைவர் தமிழச்சி |
| | தங்கபாண்டியன், எம்.பி., |
| | மாண்புமிகு தங்கம் தென்னரசு |
| | மதுரை சாதுராஜன் |
| நெய்வேலி | உ.மதிவாணன் |
| | எஸ்.கே.ஶ்ரீராம் |
| | பழனி அப்பாஸ் |
| மயிலாடுதுறை | புதுக்கோட்டை விஜயா |
| | நிவேதா முருகன், எம்.எல்.ஏ., |
| | சித்திரைகுடி பாலகிருஷ்ணன் |
| இராசிபுரம் | நாஞ்சில் சம்பத் |
| | ஆவடி அமுதநேசன் |
| வந்தவாசி | மருத்துவர். நா. எழிலன், எம்.எல்.ஏ., |
| | ரஷித்கான் |
| புதுக்கோட்டை | பேராசிரியர் |
| | கான்ஸ்டன்டைன் இரவீந்திரன் |
| | மாண்புமிகு. எஸ். இரகுபதி |
| | மருத்துவர் கலை. கதிரவன் |
| கரூர் | வி.பி. ராஜன் |
| | குடந்தை இரமேஷ் |
| | செந்தாமரை கண்ணன் |
| மதுராந்தகம் | அன்னியூர் சிவா |
| | மங்கலம் பிரபாகரன் |
| கோபிசெட்டிபாளையம் | டி.எம். கதிர் ஆனந்த், எம்.பி., |
| | என். நல்லசிவம் |
| | பாலக்கரை டி. கோவிந்தன் |
| செய்யாறு | நெல்லிகுப்பம் புகழேந்தி |
| | திருச்சி சேகர் |
| பெரம்பலூர் | குத்தாலம் க. அன்பழகன் |
| | குன்னம் இராஜேந்திரன் |
| | கு. மொழிமாறன் |
| திருவண்ணாமலை | கவிஞர் ஈரோடு இறைவன் |
| | மயிலாடுதுறை அருள்தாஸ் |
| நெல்லை | ஏ.கே.எஸ். விஜயன் |
| | டி.பி.எம். மைதீன்கான் |
| | தரமணி ஜெகதீசன் |
| திண்டுக்கல் | தமிழன் பிரசன்னா |
| | ஐ.பி. செந்தில்குமார், எம்.எல்.ஏ., |
| | செந்தூர் பாலகிருஷ்ணன் |
| ஆரணி | வழக்கறிஞர் இ. பரந்தாமன், எம்.எல்.ஏ., |
| | எம்.எஸ். தரணிவேந்தன் |
| | தி.நகர் ச. சண்முகநாதன் |
| விருத்தாசலம் | சூர்யா வெற்றிக்கொண்டான் |
| | மாண்புமிகு. சி.வி. கணேசன் |
| | டாக்டர் அபிபுல்லா |
| சிவகாசி | வழக்கறிஞர் அ. சரவணன் |
| | தமிழ் சாதிக் |
| துறையூர் | கவிஞர் காசிமுத்து மாணிக்கம் |
| | சன்.கோ. ஆறுமுகம் |
| இடங்கணசாலை | வி.பி. கலைராஜன் |
| | ஈரோடு சத்தியாவதி |
| ஒட்டன்சத்திரம் | எஸ்.கே.பி. கருணாநிதி |
| | மாண்புமிகு அர. சக்கரபாணி |
| | ஆம்பூர் தருமன் |
| | கா. பொன்ராஜ் |
| கோவில்பட்டி | இரா. ராஜீவ்காந்தி |
| | மாண்புமிகு கீதா ஜீவன் |
| | முஜ்பூர் ரகுமான் |
| குளித்தலை | ச. தங்கவேல் |
| | பா.கோ. குமார் |
| திருமயம் | கவிஞர் தமிழ்தாசன் |
| | தமிழ்கொண்டான் |
| வேதாரண்யம் | பி.டி. அரசகுமார் |
| | ஏர்போர்ட் பொன்னுசாமி |
| தாராபுரம் | டாக்டர் விஜய் |
| | செங்கல்பட்டு சீனுவாசன் |
| தஞ்சாவூர் | கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி |
| | எஸ். துரைசந்திரசேகர், எம்.எல்.ஏ., |
| | கு. வாஞ்சிநாதன் |
| பாலக்கோடு | பெருநற்கிள்ளி |
| | பி. பழனியப்பன் |
| | தமிழன்பன் |
| செஞ்சி | பூங்கோதை ஆலடி அருணா |
| | உடுமலை தாரை சிவா |
| காங்கேயம் | வி.சி. சந்திரகுமார் |
| | இல. பத்மநாபன் |
| | குமரி பிரபாகரன் |
| நாகர்கோயில் | நந்தனம் நம்பிராஜன் |
| | மேயர் ஆர். மகேஷ் |
| | நெல்லை மணி |
| கிருஷ்ணராயபுரம் | அர. திராவிடம் |
| | கோட்டூர் முருகன் |
| பெருந்துறை | செந்தலை கவுதமன் |
| | ஆற்காடு அகிலன் |
| சோளிங்கர் | விஜயா தாயன்பன் |
| | ஆத்தூர் சபரி |
| தொண்டாமுத்தூர் | கோவி.லெனின் |
| | பாரதி மோகன் |
| | என். இரவி |
| | கோபி. குமணன் |
| ஊட்டி | தமிழ் கா. அமுதரசன் |
| | பா.மு. முபாரக் |
| | காவேரிப்பட்டினம் இளையராஜா |
| நாகப்பட்டினம் | கந்திலி கரிகாலன் |
| | என்.கௌதமன் |
| | குடியாத்தம் புவியரசி |
| போடி | சைதை சாதிக் |
| | துறையூர் பாஸ்கரன் |
| கிருஷ்ணகிரி | முனைவர் பொன்னேரி சிவா |
| | தே. மதியழகன், எம்.எல்.ஏ., |
| | விஷார் க. தமிழரசன் |
| மானாமதுரை | கவிஞர் சல்மா |
| | வழக்கறிஞர் மணிமுடி |
| கீழ்பென்னாத்தூர் | சென்னை அரங்கநாதன் |
| | கலைச்செல்வி ஜெகநாதன் |
| திருத்துறைப்பூண்டி | சோம. செந்தமிழ்செல்வன் |
| | கொரஞ்சூர் முனுசாமி |
| பர்கூர் | போடி. காமராஜ் |
| | வெ. அன்புவாணன் |
| பவானி | அத்திப்பட்டு சாம்ராஜ் |
| | புலவர் இராவணன் |
| மேட்டுப்பாளையம் | வேலூர் கென்னடி |
| | தருமபுரி அதியமான் |
| அறந்தாங்கி | ஆரூர் மணிவண்ணன் |
| | வண்ணை புகாரி |
| சிதம்பரம் | ஆடுதுறை உத்திராபதி |
| | கா.வி. நெடுஞ்செழியன் |
| திருப்போரூர் | மனுஷ்யபுத்திரன் |
| | திருவொற்றியூர் கருணாநிதி |
| மேலூர் | தூத்துக்குடி சரத்பாலா |
| | மாண்புமிகு. பி. மூர்த்தி |
| | ஈரோடு இளையகோபால் |
| உடுமலைப்பேட்டை | போஸ் வெங்கட் |
| | முரசொலி மூர்த்தி |
| | வேடசந்தூர் முருகவேல் |
| இராஜபாளையம் | ஆவடி பாஸ்கர் |
| | எம்.எல். நாதன் |
| கம்பம் | வேலூர் இரமேஷ் |
| | தாம்பரம் ஜின்னா |
| சீர்காழி | மன்னை சோம. இளங்கோவன் |
| | கரூர் மதி |
| திருச்செங்கோடு | திருப்பூர் மனோகர்பாபு |
| | மதுரா. செந்தில் |
| | குன்னூர் கலீம் |
| கலசப்பாக்கம் | நாத்திகம் நாகராஜன் |
| | எழும்பூர் கோபி |
| விராலிமலை | ஆலந்தூர் ஒப்பிலாமணி |
| | வஹிதா பேகம் |
| தேனி | வரகூர் காமராஜ் |
| | தங்க தமிழ்செல்வன் |
| | கணல் சுப்பிரமணி |
| பல்லடம் | ஜோன்ஸ் ரூசோ |
| | போர்முரசு கதிரவன் |
| பொள்ளாச்சி | வயலூர் கிருஷ்ணமூர்த்தி |
| | தளபதி முருகேசன் |
| | குடந்தை ராமகிருஷ்ணன் |
| குன்னூர் | மாண்புமிகு கா.இராமச்சந்திரன் |
| | கவிஞர் சிவமுத்துவளவன் |
| | வா.சு. முத்துசாமி |
| பேராவூரணி | திருப்பூர் ரஜினி செந்தில் |
| | தீக்கனல் தியாகு |
| ஜெயங்கொண்டம் | சிங்கை பிரபாகரன் |
| | மதுரை சேவியர் |
| பட்டுக்கோட்டை | வே. மதிமாறன் |
| | க. அண்ணாதுரை, எம்.எல்.ஏ., |
| | வீர. வெள்ளைச்சாமி |
| நிலக்கோட்டை | ஆலந்தூர் மலர்மன்னன் |
| | கடையநல்லூர் இஸ்மாயில் |
| விக்கிரவாண்டி | கோவை சம்பத் |
| | புலவர் பெரியாழ்வார் |
| பெரியகுளம் | ஜஸ்டீன் வில்பர்ட் |
| | கோவை இக்பால் |
| திருச்சுழி | உடன்குடி தனபால் |
| | செங்குன்றம் திராவிடமணி |
| மொடக்குறிச்சி | கோதை மதிவாணன் |
| | போலீஸ் ஆல்பிரட்தாஸ் |
| சின்னசேலம் | பிரம்மபுரம் பழனி |
| | ஆவடி கா.மு. ஜான் |
| நன்னிலம் | தஞ்சை காமராஜ் |
| | வேங்கை சந்திரசேகர் |
| செங்கம் | பவானி கண்ணன் |
| | செங்கை சந்தானம் |
| சேந்தமங்கலம் | திப்பம்பட்டி ஆறுச்சாமி |
| | எம்.பி. ஆலன் |
| வாணியம்பாடி | சேப்பாக்கம் பிரபாகரன் |
| | குன்னூர் ஜாகீர் உசேன் |
| குடியாத்தம் | வழக்கறிஞர். சிவ. ஜெயராஜ் |
| | கோவை சௌந்தர் |
| திட்டக்குடி | தஞ்சை கலைமணிபாரதி |
| | பேர்னாம்பட்டு இராஜேந்திர பிரசாத் |
| ஓமலூர் | பசும்பொன் இரவிசந்திரன் |
| | கே.இ. செந்தமிழ் அரசு |
| கும்பகோணம் | சேலம் சுஜாதா |
| | சு. கல்யாணசுந்தரம், எம்.பி., |
| | நாமக்கல் இராஜகோபால் |
| வேடசந்தூர் | மதுரை ஜவகர் |
| | புத்தூர் ஆனந்தன் |
| பூம்புகார் | நளினி சாரங்கன் |
| | எசனை ஆறுமுகம் |
| அரூர் | ஆரணி மாலா |
| | கவிஞர் வீரமுரசு |
| குமாரபாளையம் | பொள்ளாச்சி சித்திக் |
| | எழும்பூர் தேவநிதி |
| பாப்பிரெட்டிபட்டி | ஒசூர் அப்துல் ரஹ்மான் பாரி |
| | கோவை சேரலாதன் |
| திருப்பத்தூர் (சிவகங்கை) | தக்கோலம் தேவபாலன் |
| | வண்ணை மோகன் |
| அரவக்குறிச்சி | திருப்பூர் கூத்தரசன் |
| | ரம்ஜான் பேகம் |
| | கலை கமால் |
| ஒசூர் | குடியாத்தம் பெரிய கோட்டீஸ்வரன் |
| | ஒய். பிரகாஷ், எம்.எல்.ஏ., |
| | மதுரை குருசாமி |
| பரமக்குடி | இடிமுரசு மணிமுத்து |
| | நெல்லை மூர்த்தி |
| கமுதி | வழக்கறிஞர் முத்து முத்தையா |
| | நன்னிலம் சந்திரசேகர் |
| ரிஷிவந்தியம் | நெல்லை ரவி |
| | குடியாத்தம் அன்பு |
| ஆலங்குடி | குடியாத்தம் பாரி |
| | கே.வி. ராமகிருஷ்ணன் |
| போளூர் | செங்கை தாமஸ் |
| | காரை கு. அருளானந்தம் |
| வாழப்பாடி | மதுரை அலெக்சாண்டர் |
| | எஸ்.ஆர். சிவலிங்கம் |
| | துறையூர் துரைப்பாண்டி |
| பண்ருட்டி | நாகம்மை கருப்பையா |
| | முகவை ராமர் |
| ஆம்பூர் | கவிஞர் நன்மாறன் |
| | ஈகை தனசேகரன் |
| ஊத்தங்கரை | சேலம் கோவிந்தன் |
| | சைதை பாஸ்கர் |
| நத்தம் | அதிரடி அல்தாப் |
| | பெரம்பலூர் விஜயரத்தினம் |
| மார்த்தாண்டம் | நெல்லை முத்தையா |
| | மாண்புமிகு மனோ. தங்கராஜ் |
| | சிவகாசி ஜீவா |
| வள்ளியூர் | கம்பம் பாண்டியன் |
| | இரா. ஆவுடையப்பன் |
| | சி.பி. சிங்காரவேல் |
| சாத்தான்குளம் | வண்ணை அரங்கநாதன் |
| | மாண்புமிகு அனிதா ராதாகிருஷ்ணன் |
| | முருக்கம் முனுசாமி |
| சாத்தூர் | மார்ஷல் முருகன் |
| | தா. பழூர் இளஞ்செழியன் |
| வேப்பனஹள்ளி | பூங்கா நகர் ஜெ. கண்ணன் |
| | தீக்கனல் செல்வம் |
| சூலூர் | மதுரை சுந்தரராஜன் |
| | ஆசிரியர் அன்புமணி |
| சங்ககிரி | நாகை. நாகராஜன் |
| | மொழிப்போர் காவலர் கு.வெங்கட்ராமன் |

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை – 18

**சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ.**
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.1.2024) தலைமைச் செயலகத்தில், மாற்றுத்திறனாளிகளுக்காக சிறப்பாக சேவை புரிந்தமைக்காக சிறந்த சமூக 5 பணியாளர் விருது, சிறந்த நிறுவனத்திற்கான விருது, சிறந்த ஆசிரியருக்கான விருது, சிறந்த பணியாளர் / சுய தொழில் புரியும் மாற்றுத்திறனாளிகளுக்கான விருது, மாற்றுத்திறனாளிகளை, அதிக அளவில் பணியமர்த்திய நிறுவனத்திற்கான விருது, சிறந்த ஆரம்பநிலை பயிற்சி மைய ஆசிரியருக்கான விருது, மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய ஓட்டுநர் மற்றும் நடத்துனருக்கான விருது ஆகிய விருதுகளை விருதாளர்களுக்கு வழங்கி சிறப்பித்தார்கள். உடன், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. கீதா ஜீவன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளர் திருமதி.ஜெயஸ்ரீ முரளிதரன், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை இயக்குநர் கமல் கிஷோர், ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (22.1.2024) தலைமைச் செயலகத்தில், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்கள், சுமைதூக்கும் தொழிலாளர்கள் மற்றும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களால் வழங்கப்பட்ட ஒரு நாள் ஊதியமான ஒரு கோடியே ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் ஆ. அண்ணாதுரை, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எஸ். பழனிச்சாமி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ரூ.6.50 கோடி மதிப்பில் - சென்னைப் பெருநகர

# காவல்துறையின் பயன்பாட்டிற்காக 53 வாகனங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து துவக்கி வைத்தார்!

**சென்னை, ஜன. 24 -**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.1.2024) தலைமைச் செயலகத்தில், சென்னை பெருநகர காவல்துறையின் பயன்பாட்டிற்காக 6 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 25 ஹூண்டாய் கிரெட்டா, 8 இன்னோவா கிரிஸ்டா மற்றும் 20 பொலிரோ ஜீப் ஆகிய வாகனங்களின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

சென்னை பெருநகர காவல் துறையின் சேவையை மேம்படுத்துவதற்காகவும், சென்னை பெருநகர காவல் எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்களுக்கு விரைந்து சேவைகளை வழங்குவதற்காகவும் இவ்வரசு கடந்த இரண்டரை ஆண்டுகளில் ரூ.59.73 கோடி மதிப்பீட்டில் 283 நான்கு சக்கர மற்றும் இருசக்கர வாகனங்களை கொள்முதல் செய்து காவல்துறையின் பயன்பாட்டிற்காக வழங்கியுள்ளது.

பேரிடர் மேலாண்மை நிதியின் கீழ், அத்தியாவசிய தேடல் மற்றும் தேவைக்கான உபகரணங்களை கொள்முதல் செய்ய 74.62 இலட்சம் ரூபாயும், சைபர் செயலி மற்றும் சைபர் விழிப்புணர்வுக்கு 54 இலட்சத்து 97 ஆயிரத்து 200 ரூபாயும், காவல் நிலையம், கட்டடங்கள், தங்குமிடம் மற்றும் குடி யிருப்புக்கு 35.82 கோடி ரூபாயும், போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும், உபகரணங்கள் கொள்முதல் மற்றும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் 44.38 கோடி ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது.

2023 - 24ஆம் ஆண்டிற்கான காவல்துறை மானியக் கோரிக்கையில், மாநிலத்திலுள்ள காவல் துறை அதிகாரிகளுக்கு முக்கியமாக, சரக எல்லைக்குட் பட்ட மிக முக்கிய பிரமுகர்களின் வழிக்காவல் பணி, சட்டம் மற்றும் ஒழுங்கு சம்பவங்கள், குற்றங்களைத் தடுப்பது மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவது உள்ளிட்ட பல்வேறு முனைகளில் காவல் துறையின் செயல்திறனை மேம்படுத்தும் பொருட்டு, கழிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு ஈடாக 283 நான்கு சக்கர வாகனங்கள் வாங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பின் ஒரு பகுதியாக, சென்னை பெருநகர காவல் துறையின் பயன்பாட்டிற்காக 6 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பிலான மேம்படுத்தப்பட்ட நவீன தொழில் நுட்பங்களுடன் கூடிய 25 ஹூண்டாய் கிரெட்டா, 8 இன்னோவா கிரிஸ்டா மற்றும் 20 பொலிரோ ஜீப் வாகனங்களின் சேவைகளை முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இதன் மூலம், சென்னை பெருநகர காவல் எல்லைக்குள் குற்றங்களை களையவும், போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும், சட்டம் ஒழுங்கினை சிறந்த முறையில் பராமரிக்கவும், பொதுமக்களுக்கு, குறிப்பாக பெண்கள், குழந்தைகள் மற்றும் மூத்த குடிமக்களுக்கு பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்கிடவும் 25 வாகனங்கள் பயன்படுத்தப்படும்.

மேலும், இவ்வாகனங்களிலிருந்து சென்னை பெருநகர காவல் துறையின் காவல் துணை ஆணையாளர்கள், காவல் உதவி ஆணையாளர்கள், சட்டம் மற்றும் ஒழுங்கு, குற்றப்பிரிவு மற்றும் சிறப்புப் பிரிவு காவல் ஆய்வாளர்களின் பயன்பாட்டிற்காக மற்ற வாகனங்கள் வழங்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மை செயலாளர் திருமதி பெ. அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், சென்னை பெருநகர காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர் மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கம்பம் சீமான் பாலுசாமி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன.24-

கழகத் தலைவரும் – முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :

கழகத்தின் மூத்த உடன்பிறப்புகளில் ஒருவரும், கழகத்தின் வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டு வந்தவருமான கம்பம் சீமான் பாலுச்சாமி அவர்கள், மறைந்தார் என்ற செய்தி கேட்டு மிகவும் அதிர்ச்சியடைந்தேன்.

மொழிப்போர் தியாகி தேவேந்திரன் அவர்களின் இளவலான சீமான் பாலுச்சாமி அவர்கள், 2006 பேரவைத் தேர்தலில், ஆண்டிப்பட்டி தொகுதியில் கழக வேட்பாளராகக் களம் கண்டவர். கொள்கை பிடிப்போடு கழகப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட அவரது மறைவு, திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பேரிழப்பாகும்!

அவரை இழந்து வாடும் கழக உடன்பிறப்புகளுக்கும், நண்பர்கள், உறவினர்கள் மற்றும் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கொசு ஒழிப்பு புகைபரப்பும் பணிகள் - கொசுக் கொல்லி மருந்து தெளிக்கும் பணிகள்!

# சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொசு ஒழிப்பு நடவடிக்கைகள்!

## தீவிரமாக மேற்கொள்ள - மேயர் ஆர்.பிரியா அறிவுறுத்தல்!

சென்னை, ஜன.24-

மேயர் திருமதி ஆர். பிரியா தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொசு ஒழிப்பு உள்ளிட்ட பொது சுகாதார நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம், நேற்று முன்தினம் ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியின் 15 மண்டலங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் தீவிர கொசு ஒழிப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, மேலும் இப்பணிகளை தீவிரமாக மேற்கொள்வது குறித்து மேயர் ஆலோசனைகளை வழங்கினார். மேலும், தெரு நாய்களின் பெருக்கத்தை கட்டுப்படுத்துதல், மாடுகள் சாலைகளில் சுற்றித்திரிவதை கட்டுப்படுத்துதல், மக்களுக்கு சிறந்த மருத்துவ சேவைகள் வழங்குதல் உள்ளிட்ட சுகாதார நடவடிக்கைகள் குறித்து மேயர் ஆய்வு செய்து அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் மேயர் பேசும்போது தெரிவித்ததாவது :

கொசு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பெருநகர சென்னை மாநகராட்சியில் 364 கைத் தெளிப்பான்கள், 70 பவர் ஸ்பிரேயர்கள், 210 பேட்டரியால் இயங்கும் தெளிப்பான்கள், கையினால் இயக்கும் 239 புகைப்பரப்பும் இயந்திரங்கள், 3 சிறிய புகைப்பரப்பும் இயந்திரங்கள் மற்றும் வாகனங்களில் பொருத்தப்பட்ட 64 புகைப்பரப்பும் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், கொசுக்களை ஒழிக்கத் தேவையான அனைத்து மருந்துகளும் போதுமான அளவில் கையிருப்பில் உள்ளன.

கொசு ஒழிப்புப் பணிகளை மேற்கொள்ளவும், பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்திடவும் 3319 பணியாளர்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர். நாள்தோறும் காலை, மாலை இருவேளைகளிலும் கொசு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கான புகை மருந்து அடித்தல் மற்றும் கொசுக் கொல்லி மருந்து தெளிக்கும் பணியினை பணியாளர்கள் தீவிரமாக மேற்கொள்ள வேண்டும்.

பொதுமக்கள் தங்களின் வீடு மற்றும் சுற்றுப்புறத்தில் தண்ணீர் தேங்கும் வகையில் உள்ள உபயோகமற்ற பொருட்களை அகற்றிடவும், கிணறு, மேல்நிலைத் தொட்டி, கீழ்நிலைத் தொட்டி, தண்ணீர் தொட்டிகள் முதலியவற்றை கொசுப்புழுக்கள் உற்பத்தியாகாத வண்ணம் மூடி வைக்கவும், தண்ணீர் நிரப்பிய பூ ஜாடி மற்றும் கீழ்த் தட்டு, குளிர்பதனப் பெட்டியின் கீழ்த்தட்டு, மணி பிளான்ட் போன்றவற்றில் தேங்கி நிற்கும் தண்ணீரை வாரமொருமுறை அகற்றி தங்களின் வீடு, மொட்டை மாடிகளில் உள்ள மழைநீர் தேங்கும் பொருட்களை அகற்றி, சுற்றுப்புறத்தை தூய்மையாகப் பராமரிக்க வேண்டும் என பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்திட அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

# மாநாட்டுக்கு உலக சாதனை அங்கீகாரம்!

**சே**லத்தில் நடைபெற்ற தி.மு.க. இளைஞரணி இரண்டாவது மாநில மாநாடு உலக சாதனையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இளைஞரணி மாநில மாநாட்டை 9 லட்சம் சதுர அடி பரப்பளவில் பிரம்மாண்ட பந்தலை வடிவமைத்து நடத்தியதை 'யுனிக் வேர்ல்ட் ரெக்கார்ட்ஸ்' அமைப்பு உலக சாதனையாக அங்கீகரித்து சான்றிதழ் வழங்கியுள்ளது. இதற்கான சான்றிதழ் முதல்வரிடம் வழங்கப்பட்டது. மாநாட்டு பந்தல் ஏற்பாட்டாளர் பந்தல் சிவா உள்ளிட்டோர் கௌரவிக்கப்பட்டனர்.



இயன்றதை செய்வோம் என்கிற தன்னார்வத் தொண்டின் சமூக ஆர்வலர் நத்தர்ஷா, சகோதரர் அப்துல் காதர் அவர்களின் மறைவுக்கு கழகத் துணைப் பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி அஞ்சலி செலுத்தி, அவரைப் பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். மாவட்டப் பொருளாளர் இரா. ஜனகராஜ், மாவட்டக் காங்கிரஸ் செயலாளர் முபாரக் அலி, மருதம் ஒருங்கிணைப்பாளர் இரவி கார்த்திகேயன், நகர மன்ற உறுப்பினர்கள் புருசோத்தமன், அருள் ஆர்ட்ஸ் அன்பரசு, சிறுபான்மை அணி தாகிர், அயலக அணி ஓம்லக்கி, நகர விவசாய அணி பாஸ்கர் உள்ளிட்ட பலர் அஞ்சலி செலுத்தினர்.

செஞ்சி தொகுதியில்

# மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீர வணக்கநாள் பொதுக் கூட்டம்!

## டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா - அமைச்சர் செஞ்சி மஸ்தான் - உடுமலை தாமரை சிவா சிறப்புரை!

செஞ்சி, ஜன. 24-

செஞ்சி தொகுதி தி.மு.க சார்பில் செஞ்சி ஒன்றியம் அப்பம்பட்டில் மொழிப் போர்த் தியாகிகளுக்கு வீர வணக்கநாள் பொதுக்கூட்டம் மாநில சுற்றுச்சூழல் அணி தலைவர் டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா, அமைச்சர் செஞ்சி மஸ்தான், தலைமைக் கழக பேச்சாளர் உடுமலை தாமரை சிவா ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்ற தொகுதி தி.மு.க. மாணவரணி சார்பில் மொழிப் போர்த் தியாகிகளுக்கு வீர வணக்க நாள் பொதுக் கூட்டம் நாளை (25.1.2024-வியாழக்கிழமை) மாலை 3 மணி முதல் 6.00 மணிவரை செஞ்சி ஒன்றியம் அப்பம் பட்டு கலைஞர் திடலில் நடைபெறுகிறது.

மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரசன்னா தலைமை தாங்குகிறார். செஞ்சி ஒன்றிய பெருந்தலைவரும். தலைமைச் செயற்குழு உறுப்பினர் செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர் விஜயகுமார் அனைவரும் வரவேற்கிறார். தலைமைச் செயற்குழு உறுப்பினரும், மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் துவக்க உரை நிகழ்த்துகிறார்.

மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் ஞானசேகரன், பெனாசிர், ஒன்றிய நிர்வாகிகள் திருமாவளவன், ஆறுமுகம்,ஒன்றிய அவைத் தலைவர் ஆறுமுகம், ஊராட்சி மன்ற தலைவர் பிருந்தாசக்தி முருகன், நிர்வாகிகள் கணேசன், மல்லிகா சேகர், பழனி, அன்வர்சயீத், காந்தி, பாலமுருகன், முரளி, சீதாராமன், நாகராஜன், முனுசாமி, சங்கர், சுரேஷ், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். கூட்டத்தில் மாநில சுற்றுச்சூழல் அணி தலைவர் டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா, சிறுபான்மையினர் நலன்மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், தலைமைக் கழக பேச்சாளர் உடுமலை தாமரை சிவா ஆகியோர்கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

மாநில விவசாய அணி இணை செயலாளர்செந்தமிழ் செல்வன், ஒன்றிய செயலாளர்கள் விஜயராகவன், பச்சையப்பன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்ரமணியன், பொதுக்குழு உறுப்பினர்கள் மணிவண்ணன், செல்வராஜ், பேரூராட்சிமன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், மருத்துவ அணி அமைப்பாளர் சக்தி பிரியன். இலக்கிய அணி அமைப்பாளர் தமிழரசன், மாவட்ட விவசாய அணி தலைவர் அஞ்சாஞ்சேரி கணேசன்,மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, துணை சேர்மன்கள் ஜெயபாலன்,விஜயலட்சுமி முருகன்,நகர செயலாளர்கள் செஞ்சி கார்த்திக், அனந்தபுரம் சம்பத்,முன்னாள் செஞ்சி நகர செயலாளர் காஜா நஜீர், மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன்,பேரூர் மன்ற தலைவர் முருகன், மாவட்ட கவுன்சிலர்கள் அகிலா பார்த்திபன்,செல்வி ராம சரவணன், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர்கள் ராஜலட்சுமி செயல்மணி, அமுதா கல்யாண் குமார், மாவட்ட சிறுபான்மையினர் அணி துணை அமைப்பாளர் மாத்தூர் தாஸ் உள்ளிட்டோர்கலந்து கொள்கின்றனர். செஞ்சி ஒன்றிய மாணவரணி அமைப்பாளர், மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை நன்றி கூறுகிறார்.

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில்

# மொழிப் போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு

நாமக்கல், ஜன.24-

நாமக்கல் மாவட்டக் கிழக்கு பொதுச் செயலாளர் கே.ஆர்.என். ராஜேஸ்குமார் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மொழிப்போர் தியாகிகளை நினைவு கூரும் வகைகயில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டமானது நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் தி.மு.க. மாணவர் அணி சார்பில் நாளை (25.01.2024-வியாழக்கிழமை) மாலை 5.00 மணிக்கு நாமக்கல் பூங்கா சாலையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர், மக்களவை உறுப்பினர் ஆ.ராசா, தலைமை கழகப் பேச்சாளர் கம்பம் பாண்டித்துரை ஆகியோர் எழுச்சியுரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்திற்கு வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் , நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், வார்டு கழக செயலாளர்கள், நகர் மன்ற உறுப்பினர்கள், அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கிளைக் கழக செயலாளர்கள், கழக மூத்த முன்னோடிகள், கழக தொண்டர்கள், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணி நிர்வாகிகள், என அனைவரும் பெரும் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.





சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் நகர தி.மு.க. சார்பில் தை திருநாளை முன்னிட்டு சமத்துவப் பொங்கல் வைத்து பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு நகரச் செயலாளர் பாலசுப்ரமணியம் தலைமையில் மாலை அணிவித்து இனிப்புகள் வழங்கினார். நிகழ்ச்சியில் நகர அவைத் தலைவர் மாணிக்கம், நகர துணைச் செயலாளர் புவனேஸ்வரி வேல்முருகன், பொருளாளர் ராமச்சந்திரன், மாவட்டப் பிரதிநிதி ஸ்டாலின், பாலமுரளி கிருஷ்ணன், மாவட்டச் சிறுபான்மைப் பிரிவுத் தலைவர் பர்கத் அலி, கவுன்சிலர்கள் குமார், பாஸ்கரன், ராஜமாணிக்கம், ஆடிட்டர் வேல்முருகன், ரூபி நாகராஜன், கோபி , ஆட்டோ முருகன், மணி, ரவி , துரை, வெங்கடேஷ் , இளங்கோ, பாண்டியன், ராமச்சந்திரன், இளங்கோ மன்னன் மற்றும் நகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.1.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிக்காலத்தில் இயற்கை எய்திய 71 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 3 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் ஆ. அண்ணாதுரை, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எஸ். பழனிச்சாமி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

6 சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்களுக்கு திட்ட ஒப்புதல் அரசாணைகள்! ஜவுளி தொழில் முனைவோரின்

# தொழில் நிறுவனங்களுக்கு 9.25 கோடி ரூபாய்க்கான காசோலைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, ஜன.24- முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.1.2024) தலைமைச் செயலகத்தில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை சார்பில், சிறிய அளவிலான ஜவுளிப் பூங்கா திட்டத்தின் கீழ் 6 சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்களுக்கு திட்ட ஒப்புதல் அரசாணைகளையும், ஜவுளி தொழில் முனை வோர்களுக்கான அரசு மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 17 தொழில் நிறுவனங்களுக்கு 10 விழுக்காடு கூடுதல் மூலதன முதலீடு மானியத்தொகையாக 9.25 கோடி ரூபாய்க்கான காசோலைகளையும் வழங்கினார்.**

**சிறிய அளவிலான ஜவுளிப்பூங்கா திட்டத்தின் கீழ் 6 சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்களுக்கு திட்ட ஒப்புதல் அரசாணைகள்!**

நூல் உற்பத்தி மற்றும் பின்னலாடைத் தொழிலில் முதல் இடத்தில் இருக்கும் தமிழ்நாட்டினை, இந்தியாவின் சிறந்த வணிகத் தளமாக நிலை நிறுத்திட வேண்டும் என்ற உயரிய நோக்கிலும், அதிகமான தொழில் முதலீட்டினை ஈர்த்து அதன்மூலம் நீடித்த பொருளாதார வளர்ச்சியினை அடைந்திடவும், சிறிய அளவிலான தொழில் முனைவோர்களை ஊக்குவிப்பதன் மூலம் அதிகமான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

சிறிய அளவிலான ஜவுளிப் பூங்கா திட்டம் 2015ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட போதிலும் திட்ட வழிமுறைகளில் இருந்த இடர்பாடுகள் காரணமாக தமிழ்நாட்டில் யாரும் ஜவுளிப் பூங்கா அமைக்க முன்வரவில்லை. இந்த இடர்பாடுகளை களையும் வகையில் சிறு மற்றும் நடுத்தர ஜவுளி தொழில்முனைவோர்கள் ஜவுளி பூங்காக்கள் அமைக்கும் வழிமுறைகளை எளிதாக்கும் பொருட்டு, சிறிய அளவிலான ஜவுளிப் பூங்கா திட்டத்திற்கான நிபந்தனைகளை தளர்த்தி 2022ஆம் ஆண்டில் இவ்வரசு ஆணையிட்டது.

அதன்படி, தற்போது சிறிய அளவிலான ஜவுளிப் பூங்கா திட்டத்தின் கீழ், 2 ஏக்கர் நிலத்தில் குறைந்தபட்சம் 3 உற்பத்தி நிறுவனங்கள் நிறுவப்பட வேண்டும் என்றும், இதற்கென உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தொழிற்சாலை கட்டடங்கள் அமைக்க தகுதியான திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு (அதிகபட்சமாக ரூ.2.50 கோடி) வரை மானியமாக தமிழ்நாடு அரசு வழங்கிடவும் ஆணையிட்டுள்ளது. இதன் காரணமாக, சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்களை அமைப்பதற்கு ஜவுளித் தொழில்முனைவோர் அதிக அளவில் ஆர்வத்துடன் முன்வந்துள்ளனர்.

சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்கள் திட்டத்தின் கீழ், திருவள்ளூர்திருப்பதி மினி டெக்ஸ்டைல் பார்க், தர்மபுரிபாரத் மினி டெக்ஸ்டைல் பார்க், கரூர் VMD மினிடெக்ஸ்டைல் பார்க், திருப்பூர்கார்த்திகேயா வீவிங் பார்க், கரூர் ஸ்ரீ பிரனவ் மினி டெக்ஸ்டைல் பார்க், கரூர்நாச்சி மினிடெக்ஸ்டைல் பார்க் ஆகிய 6 சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்களுக்கு, திட்ட செயலாக்கத்திற்கான மொத்த மானியத் தொகை 13.75 கோடி ரூபாயில், முதற்கட்டமாக 5 கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்து அதற்கான திட்ட ஒப்புதல் அரசாணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மினி டெக்ஸ்டைல் பார்க் நிர்வாகி களிடம் வழங்கினார்.

இதன்மூலம், சிறு மற்றும் நடுத்தரஜவுளி தொழில்முனைவோர்கள் பயன்பெறுவதோடு சுமார் 1200 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். ஒரு பூங்காவில் ஆண்டுக்கு 24 லட்சம் மீட்டர் உற்பத்தி வீதம் 6 பூங்காக்களில் 144 லட்சம் மீட்டர் அளவிற்கு துணி வகைகள் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**மூலதன முதலீடு மானியத்தொகையாக ரூ.9.25 கோடி வழங்குதல்!**

தமிழ்நாட்டின் கைத்தறி, விசைத்தறி, நூற்பு, பதனிடுதல் உள்ளிட்ட பிரிவுகளில் நவீன, ஒருங்கிணைந்த மற்றும் உலகத் தரம் வாய்ந்த ஜவுளித் துறையை உருவாக்கவும், உள்நாட்டு சந்தை மற்றும் வெளிநாட்டு ஏற்றுமதிக்காகவும் உற்பத்தி செலவைக் குறைத்து, உயர்தர ஜவுளி ஆடைகள் உற்பத்தி செய்யவும், புதுமை, பன்முகத் தன்மை, மதிப்பு கூட்டல் ஆகியவற்றில் அதிக முக்கியத்துவம் அளித்து ஜவுளித்துறையை ஊக்குவிக்கவும், ஜவுளித் தொழில் முனைவோர்களுக்கு அரசு மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஜவுளித் தொழில் முனைவோர்கள் தங்களது நிறுவனங்களில் செய்துள்ள முதலீட்டில் 10 விழுக்காடு கூடுதல் மூலதன முதலீடு மானியத் தொகை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஜவுளித் தொழில் முனைவோர்களுக்கான முதலீட்டு மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ், முதல் கட்டமாக 17 ஜவுளி நிறுவனங்களுக்கு 10 விழுக்காடு கூடுதல் மூலதன முதலீடு மானியத் தொகை 9.25 கோடி ரூபாய் வழங்கிடும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் 5 நிறுவனங்களுக்கு மானியத் தொகை 5.33 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ், துணிநூல் துறை ஆணையர் முனைவர் மா.வள்ளலார், கைத்தறி துறை ஆணையர் கே. விவேகானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஓமன் நாட்டின் தலைநகர்

# மஸ்கட் மாநகரில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

## கழக அயலக அணிச் செயலாளர் எம்.எம் அப்துல்லா எம்.பி பங்கேற்பு!

மஸ்கட் (ஓமன்), ஜன.24- ஓமன் தி.மு.க. அயலக அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாக மஸ்கட் மாநகரில் நடைபெற்றது.

அயல்நாடுகளில் செயல்படும் அணிகளில் முதலாவது அணியாக கலைஞரின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை இரண்டாவது முறையாக சிறப்பாக கொண்டாடியது.

இந்நிகழ்ச்சியில் கழக அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி. சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்ச்சியின் முத்தாய்ப்பாக கழகத் தலைவரின் வேண்டுகோளுக்கிணங்க குழந்தைகள் மற்றும் மாணவ செல்வங்கள் பங்கு பெரும் வகையில் பேச்சுப்போட்டி, ஓவிய போட்டி, கவிதை போட்டி என பல்வேறு போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டு கலைஞரின் சாதனைகளை இளம் தலைமுறையினர் அறியும் வண்ணம் நிகழ்ச்சி அமைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகள் மற்றும் மாணவ செல்வங்கள் தங்களது படைப்புகளை நேரடியாக விழா மேடையில் அரங்கேற்றி காட்டினர். முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திட்டங்களை ஓவியமாகவும் கவிதையாகவும் அமைத்திருந்தது பாராட்டிற்குரியதாக இருந்தது.

மேலும் கலைஞர் பற்றிய பேச்சு போட்டிகள் காண்பவர்களை பிரமிக்கும் வைக்கும் வண்ணம் அமைந்திருந்தது. அடுத்த தலைமுறையினரும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் செயலாற்றிய திட்டங்கள் பற்றி அறிந்திருந்தது மிகவும் வியப்பாக இருந்தது. மேலும் மகளிர் அணியினர் மற்றும் பெரியவர்கள் பங்கேற்ற போட்டிகளும் நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற எம்.எம் அப்துல்லா எம்.பி பேசும்போது,

கலைஞர் அவர்கள் கடந்த ஐம்பது ஆண்டுகளாக எவ்வாறு தொலைநோக்குப் பார்வையோடு செயல்பட்டு தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு வித்திடும் வண்ணம் திட்டங்களை கொண்டு வந்தார் என்பது குறித்தும், கல்வி, சுகாதாரம், மொழி வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, வரலாற்றுச் சின்னங்களை அமைத்தல், கட்டமைப்பு வளர்ச்சி, நவீன தொழில்நுட்ப வளர்ச்சியை பயன்படுத்துதல் என்று அவர் செய்த அடிப்படை கட்டமைப்பை குறித்தும் விரிவாக விளக்கினார். ஓமன் தி.மு.க. செயலாளர் சிவக்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பொருளாளர் சிவசெந்தில் ஓமன் திமுக பற்றிய செயல்பாடுகள் மற்றும் செயல்படுத்திய பல்வேறு நலத்திட்டங்கள் பற்றிய செய்திகளோடு விழாவை தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் புரவலர் அப்துல் சலாம், இளைஞரணிச் செயலாளர் திருமாவளவன், அமைப்புச் செயலாளர் கருணாநிதி, துணைப் பொருளாளர் அன்பில் சிவா, வலைதள அளிச்செயலாளர்கள் பாக்கியராஜ் மாணிக்கவேல், நிர்வாக குழுவைச் சார்ந்த முஹம்மது பர்ஷாத், முகமது பாரூக், மருத்துவர் அணியைச் சார்ந்த டாக்டர் சென்பாலன் மற்றும் இளஞ்செழியன், செல்வின், ராஜன், பழனி குமார், கோபாலகிருஷ்ணன், தங்கதுரை, மகளிர் அணியைச் சார்ந்த அனைத்து நிர்வாகிகள் மற்றும் பல்வேறு துறையை சார்ந்த வல்லுனர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட போட்டியாளர்களுக்கு சிறப்பு பரிசுகள் மற்றும் சான்றிதழ் ஓமன் திமுக சார்பாக வழங்கப்பட்டது. அறுசுவை விருந்தோடு கலைஞர் நூற்றாண்டு விழா இனிதே நிறைவு பெற்றது.

மொழிப்போர்த் தியாகிகளான தாளமுத்து, நடராசன், தருமாம்பாள் நினைவிடங்களில்

# கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அஞ்சலி!

## கழகத் தோழர்களுக்கு சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா வேண்டுகோள்!



மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாளை முன்னிட்டு, தீந்தமிழ் காக்க தம் தேக்கு தேகங்களை வெந்தழலுக்கு விருந்தாக்கி மறைந்தும், தமிழர் நெஞ்சில் மறவாமல் வாழ்கின்ற வீரமறவர்களாம், தமிழ் காத்த தியாக தீபங்கள் தாளமுத்து, நடராசன் மற்றும் டாக்டர் தருமாம்பாள் ஆகியோருக்கு நாளை (25.1.2024 வியாழக்கிழமை) காலை 8.30 மணி அளவில் சென்னை மூலக்கொத்தளம் மயானத்தில் உள்ள நினைவிடத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரும் கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின், கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ., மாணவர் அணி இணைச் செயலாளர் எஸ்.மோகன் மற்றும் கழக முன்னணியினர் மலர்வளையம் வைத்து வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

அதுபோது கழக மாநில அமைச்சர் பெருமக்கள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் வருகை தந்து மொழிப்போர் தியாக தீபங்களுக்கு அஞ்சலி செலுத்த வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

**தா.இளையஅருணா**
செயலாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.


## சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமக் கூட்டம்!

*சென்னை, ஜன.24- முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (22.01.2024) சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 277 ஆவது குழுமக் கூட்டம் நடைபெற்றது.*

*இக்குழுமக் கூட்டத்தில், சென்னை பெருநகர எல்லைக்குள் நில உபயோக மாற்ற விண்ணப்பங்களின் மீது பரிசீலித்தும் முடிவுகள் எடுக்கப்பட்டன. அமைச்சர் அவர்களால் 2023-2024 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்கு ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு, நிதி ஒப்புதல் வழங்குவது குறித்தும், திட்டங்களின் மீதான தொடர் நடவடிக்கைகள் குறித்தும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் நிர்வாக நடவடிக்கைகள் குறித்தும் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.*

*இக்குழுமக் கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ்.முருகன், சட்டமன்ற உறுப்பினர்கள் (மாதவரம்) எஸ்.சுதர்சனம், (திரு.வி.க.நகர்) பி.தாயகம் கவி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, குழும உறுப்பினர்கள், உயர் அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*


# கண்ணீர் அஞ்சலி



பாலுச்சாமி தேவர் மகனும்
தேவேந்திரர், குபேந்திரர் இவர்கள் சகோதரருமான

# பா.சீமான்

நிறுவனர் - சீமான் 100 / 100 டுடோரியல்    வயது : 66

நெ.18, ஒச்சாதேவர் லேன்
இராமையா கவுண்டர் வீதி, கம்பம், தேனி மாவட்டம்.

22.01.2024 திங்கட்கிழமை காலை 10:30 மணியளவில்
இயற்கை எய்தினார். 23.01.2024 கம்பம் தேனி மாவட்டம்
கம்பத்தில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை
ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்

ஆழ்ந்தவருத்தத்துடன்:
மதன், பரத், ஸ்ரீ, சுரேஷ், அழகுக்குமரன், கணேஷ், மதி,
குடும்பத்தார் மற்றும் VERANDA RACE குழுமத்தினர்.



# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

மறைவு : 23.01.2023




54 ஆம் ஆண்டு
தங்களின் திருமண நாளில்
எங்களை விட்டு பிரிந்து
என்றும் இதயத்தில் நீங்கா நினைவுகளுடன் திகழ்கின்ற
திருமதி. A.வச்சலா அம்மாள் அவர்களுக்கு
எங்களின்

# இதய அஞ்சலி

என்றும் நீங்கா நினைவுகளுடன்...
கணவர் : R.ஆளவந்தார், PWD காண்ட்ராக்டர்
இலக்கிய அணி துணை அமைப்பாளர், புதுச்சேரி மாநில தி.மு.க
மகன்கள் : A.கருணாநிதி, FRANCE A.கிருஷ்ணசாமி, PWD காண்ட்ராக்டர் மருமகன் : E.புஷ்பராஜ், TNPL Pvt., (Rtd)
மற்றும் மகள், மருமகள்கள், பேரன்கள், பேத்திகள், உறவினர்கள், ஒத்தவாடை வீதி, உருளையன்பேட்டை, புதுச்சேரி.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், புதுமைப் பெண் திட்ட பயனாளிகளான மாணவிகளுக்கு வாழ்த்துமடல் அனுப்பி வைத்ததைத் தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி புதுமைப் பெண் திட்ட பயனாளிகளுக்கு வாழ்த்துமடலை வழங்கினார். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.இரா.மணி, இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.சா.ஸ்ரீபிரியா தேன்மொழி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.ஜெயலட்சுமி தமிழ்ச்செல்வன், நகர்மன்றத் தலைவர் திருமதி.திலகவதி செந்தில், அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், துணை இயக்குநர்கள் (சுகாதாரப்பணிகள்) மரு.ராம்கணேஷ் (புதுக்கோட்டை), மரு.நமச்சிவாயம் (அறந்தாங்கி), மாவட்ட சமூகநல அலுவலர் செல்வி. க.ந.கோகுலப்பிரியா, ஒன்றியக் குழுத் தலைவர்கள் திருமதி.வள்ளியம்மை தங்கமணி (திருவரங்குளம்) வி.ராமசாமி (அன்னவாசல்), நகர்மன்றத் துணைத் தலைவர் எம்.லியாகத் அலி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



தி.மு.க. இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில் மாவட்ட அமைப்பாளர் நகர்மன்ற உறுப்பினர் செந்தாமரைபாலு ஏற்பாட்டில் புதுக்கோட்டை திலகர் திடலில் நடைபெற்ற மாபெரும் கலைத்திருவிழாவை மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தொடங்கி வைத்தார். மாநில நிர்வாகிகள் த.சந்திரசேகரன், சுப.சரவணன், மாவட்ட கழக நிர்வாகிகள் அரு.வீரமணி, க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, எம்.லியாகத்அலி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சு.சண்முகம், நகர்மன்ற தலைவர் திலகவதிசெந்தில், ஒன்றியச் செயலாளர்கள் மு.க.ராமகிருஷ்ணன், தவ.பாஞ்சாலன், பொதுக்குழு உறுப்பினர் என்.சாத்தையா, அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் டி.எம்.ஆர். ராமமூர்த்தி, வே.ராஜேஸ் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை நிர்வாகிகள் கீரைஅஷ்ரப்அலி, பி.டி.ரவி, மழையூர் சத்யா, நகர்மன்ற உறுப்பினர்கள் கனகம்மன்பாபு, லதாராமலிங்கம், பழனிவேலு, பால்ராஜ், தெய்வானைமகேந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், வட்ட கழகச் செயலாளர் மற்றும் பிரதிநிதிகள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர். விழாவில் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாவட்ட துணை அமைப்பாளர்கள், கந்தர்வகோட்டை முருகையா, டாக்டர் இளையராஜா, கலைச்சுடர்மணி, முத்துமுகமது குழுவினர் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில்

# மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான், பூச்சிமுருகன், வேதா உதயசூரியன் சிறப்புரை!

திண்டிவனம், ஜன. 24 -

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் 25ஆம் தேதி திண்டிவனத்தில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்தலைமை நிலைய செயலாளர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சிமுருகன், தலைமைக் கழக பேச்சாளர் வேதா உதயசூரியன், அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர் மாவட்ட மாணவரணி அமைப்பாளர்பிரசன்னா தலைமை, திண்டிவனம் நகர செயலாளர் கண்ணன் வரவேற்புரை நிகழ்த்துகிறார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் சார்பில் மொழிப்போர்த் தியாகி களுக்கு வீர வணக்கம் நான் பொதுக் கூட்டம்நாளை(25.1.2024-வியாழக் கிழமை) மாலை 5.0 மணிக்கு திண்டிவனம் காந்தியார் திடலில்நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்டமாணவரணி அமைப்பாளர் எம்.யு.பிரசன்னா தலைமை தாங்குகிறார். திண்டிவனம் நகர செயலாளர் கண்ணன் அனைவரையும் வரவேற்கிறார்.

மொழிப்போர்த் தியாகி அகூர் ராமகிருஷ்ணன், மாவட்ட மாணவரணி, இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சுபாஷ் சந்திரபோஸ், மதிவாணன், லோகநாதன், ஞானசேகர், பெனாசிர், எம்.டி பாபு,டி கேபிரமேஷ், விஜயகுமார், எஸ்.என்.ஆர்.உதயகுமார், அண்ணாமலை, ஆகியோர் துவக்க உரை நிகழ்த்து கின்றனர்.

திண்டிவனம் நகர நிர்வாகிகள் நிர்மலா ரவிச்சந்திரன், கதிரேசன், ஆர்.ஆர். எஸ். ரவிச்சந்திரன்,பெருமாள், டி.கே.பி.பெருமாள், அசோகன், கபிலன், ரேணுகா, கௌதமன், தாஜ்தீன், சின்னாராஜேந்திரன், ராஜசக்தி, பி எஸ் முருகன் சின்னதுரை வி. எஸ்.முருகன், சின்னதுரை, அசோக் குமார்ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பொதுக்கூட்டத்தில் தலைமை நிலைய செயலாளர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி முருகன், தலைமை கழக பேச்சாளர் வேதா உதயசூரியன், சிறுபான்மை யினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகின்றனர்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன். சீத்தாபதி சொக்கலிங்கம்,செந்தமிழ் செல்வன், தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர், பொருளாளர்ரமணன், துணை செயலாளர்கள் ரவிக்குமார், அருணகிரி, அமுதா ரவிக்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் சீனி சின்னசாமி, பொதுக்குழு உறுப்பினர்கள் வீடூர்ரவி, சாந்தி ஏழுமலை, பாலகிருஷ்ணன், ஒன்றிய செயலாளர்கள் சொக்கலிங்கம், ராஜாராமன், அண்ணாதுரை, தயாளன் ,துரை, ரவிச்சந்திரன், பழனி, மணிமாறன், செழியன், இளம்வழுதி,மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன், மரக்காணம் பேரூராட்சி மன்ற தலைவர் வேதநாயகி ஆளவந்தார், துணைச் செயலாளர் மயிலம் ஒன்றிய துணை புனித ராமஜெயம், பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர்கள் பலராமன், அமுதா கல்யாண் குமார், மாவட்ட கவுன்சிலர்கள் எழிலரசி ஏழுமலை, மனோ சித்ரா ராஜேஸ்வரன், மகேஸ்வரி குமரேசன், விஜயன், புஷ்பவள்ளி குப்புராஜ், அன்புசெழியன், சசிகலா மோக சுந்தரம், மாவட்ட அணி அமைப்பாளர்கள் ஆனந்த், கோபிநாத், அன்சாரி, சிவகாமி, ரகுபதி, தங்கராஜ், திருமலை, ரவிச்சந்திரன், அண்ணாதுரை, சந்திரன், செந்தில் முருகன், கே. செந்தில் குமார், விஜயராகவன், பி. செந்தில்குமார், ராஜா, காதர் நவாஸ், ஜி. தமிழரசன்,புலவர் தமிழரசன், திலகவதி, சத்திய பிரியன், ரோமியன் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர் . நகர மாணவரணி அமைப்பாளர் அஜய் நன்றி கூறுகிறார்.

### புதுக்கோட்டை வடக்கு மாவட்ட

# கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் மாபெரும் கலைத்திருவிழா!

## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தொடங்கி வைத்தார்!

புதுக்கோட்டை, ஜன. 24 -

தி.மு.க. இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில் மாவட்ட அமைப்பாளர் நகர்மன்ற உறுப்பினர் செந்தாமரைபாலு ஏற்பாட்டில் மாபெரும் கலைத்திருவிழா புதுக்கோட்டை திலகர்திடலில் நடைபெற்றது.

விழாவை மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தொடங்கி வைத்தார். மாநில நிர்வாகிகள் த.சந்திரசேகரன், சுப.சரவணன், மாவட்ட கழக நிர்வாகிகள் அரு.வீரமணி, க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, எம்.லியாகத்அலி மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சு.சண்முகம், நகர்மன்ற தலைவர் திலகவதிசெந்தில், ஒன்றிய செயலாளர்கள் மு.க.ராமகிருஷ்ணன், தவ.பாஞ்சாலன், பொதுக் குழு உறுப்பினர் என்.சாத்தையா, அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் டிஎம்ஆர். ராமமூர்த்தி, வே.ராஜேஸ் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை நிர்வாகிகள் கீரைஅஷ்ரப் அலி, பி.டி.ரவி, மழையூர் சத்யா, நகர்மன்ற உறுப்பினர்கள் கனகம்மன்பாபு, லதாராமலிங்கம், பழனிவேலு, பால்ராஜ், தெய்வானைமகேந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் வட்ட கழக செயலாளர் மற்றும் பிரதிநிதிகள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

விழாவில் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாவட்ட துணை அமைப்பாளர்கள் கந்தர்வ கோட்டை முருகையா, டாக்டர் இளையராஜா, கலைச்சுடர்மணி முத்து முகமது குழுவினர் இணைந்து வழங்கிய நாட்டுப்புற பாடல்கள், மானாட்டம், மயிலாட்டம், பொய்க் கால் குதிரை, சிலம்பம் உள்ளிட்ட தமிழர்களின் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளை நடத்தினர்.

### மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் தலைமை!

# கோவை மாநகர் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் முனைவர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் - அமைச்சர் சு.முத்துசாமி - தா.ஆதித்தன் சிறப்புரை!

கோவை, ஜன. 24 -

வருகின்ற 25.1.2024, வியாழக்கிழமை மாலை 5.30 மணியளவில், சித்தாபுதூர், வி.கே.கே.மேனன் சாலையில், கோவை மாநகர் மாவட்ட, தி.மு.க. மாணவரணி சார்பில், “மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள்” பொதுக் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டம் மாவட்டச் செயலாளர் நா.கார்த்தி, தலைமையில் நடைபெற உள்ளது.

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வி.சிவப்பிரகாஷ் வரவேற்புரையாற்றுகிறார்.

தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர்,பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சித் துறை மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி,

தலைமைக் கழகப் பேச்சாளர் தா.ஆதித்தன், கழக சொத்து பாதுகாப்புக் குழு துணைத்தலைவர் பொங்கலூர் நா.பழனிச்சாமி, கோவை மாநகராட்சி மேயர் கல்பனா ஆனந்தகுமார், மாநில மாணவர் அணி துணைச்செயலாளர் வி.ஜி.கோகுல் பேசுகிறார்கள்.

மாவட்ட அவைத்தலைவர் கணபதி ராஜ்குமார், மாவட்ட துணை செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ, கல்பனா செந்தில், பொருளாளர் எஸ்.எம்.பி.முருகன், பகுதி கழக செயலாளர்கள் மா.நாகராஜ், துரை. செந்தமிழ்ச்செல்வன், இரா.சேரலாதன், எஸ்.எம்.சாமி, மு.சிவா,

சேக் அப்துல்லா, ஆர்.எம்.சேதுராமன், ப.பசுபதி, மார்க்கெட்.எம்.மனோகரன், வி.ஐ.பதுருதீன், கணபதி லோகு, அஞ்சுகம் எம்.பழனியப்பன், கே.எம்.ரவி, எ.எம்.கிருஷ்ணராஜ், வ.ம.சண்முகசுந்தரம், பரணி கே.பாக்கியராஜ்,

மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் - எஸ்.பாண்டி, ஆர்.நந்தகுமார், பி.பைந்தமிழன், பா.ஜெகதீசன்,

48 வது வட்டக் கழக செயலாளர் மு.சசிக்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

தலைமைக் கழக நிர்வாகிகள் பி.நாச்சிமுத்து, கே.எம்.தண்டபாணி,

பி.ஆர்.அருள்மொழி, ப.பைந்தமிழ் பாரி, அ.தமிழ்மறை, டாக்டர் கோகுல் கிருபா சங்கர், மு.இரா.செல்வராஜ், நா.முருகவேல், அ.திராவிடமணி, விஷ்ணுபிரபு, எம்.வீரகோபால், மீனா ஜெயக்குமார், நா.தமிழ்ச்செல்வன்,

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஒய்.பாலசுப்ரமணியன், டி.எஸ்.பி.. கண்ணப்பன், பி.ஆனந்தகுமார்,

பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.மணிகண்டன், வெ.சசிகுமார், ஜோ.நோயல் செல்வம், மு.மா.ச.முருகன், வெ.ந.உதயகுமார், மா.மகுடபதி, ச.குப்புசாமி, எஸ்.கே.ஆனந்தகுமார், ச.கார்த்திகேயன், தங்கம் (எ) சந்திரசேகரன், எஸ்.பி.சரஸ்வதி புஷ்பராஜ் பங்கேற்கிறார்கள்.

மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.மணிகண்டன், வெ.சசிகுமார், ஜோ.நோயல் செல்வம், மு.மா.ச.முருகன், வெ.ந.உதயகுமார், மா.மகுடபதி, ச.குப்புசாமி, எஸ்.கே.ஆனந்தகுமார், ச.கார்த்திகேயன், தங்கம் (எ) சந்திரசேகரன், எஸ்.பி.சரஸ்வதி புஷ்பராஜ் ஆகியோர் பங்கேற்கிறார்கள்.

மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் ரா.ஸ்ருதிப்பிரியா கூட்ட முடிவில் நன்றி கூறுகிறார்.

### தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில்

# மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## சு.கல்யாணசுந்தரம் எம்.பி. - சேலம் பெ.சுஜாதா - நாமக்கல் ராஜகோபால் சிறப்புரையாற்றுகின்றனர்!

தஞ்சாவூர், ஜன. 24 -

மொழிப்போர் தியாகிகளின் நினைவை போற்றும் வகையில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்திரவிற்கினங்க தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் கும்பகோணத்தில் வீரவணக்க நாள் பொதுக் கூட்டம் நடைபெற உள்ளது.

நாளை (25.01.2024 - வியாழக்கிழமை) மாலை 06.00 மணிக்கு கும்ப கோணம், சாரங்கபாணி கீழவீதியில் நடைபெற உள்ள வீரவணக்க நாள் பொதுக் கூட்டத்தில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் க.செந்தில்குமார் தலைமை வகிக்கின்றார். துணை அமைப்பாளர் முனைவர் ரா.ராஜேஷ் வரவேற்புரையாற்ற உள்ளார்.

மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் எஸ்.சூர்யா, சௌ.தேவராஜன், ப.இலக்கியா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, மாநில பிரச்சாரக்குழு செயலாளர் சேலம் பெ. சுஜாதா, தலைமைக் கழகப் பேச்சாளர் நாமக்கல் ராஜகோபால் ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளனர்.

இக்கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் செ.இராமலிங்கம் எம்.பி, தொ.மு.ச. பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.அன்பழகன் எம்.எல்.ஏ, அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி.செழியன், கும்பகோணம் மாநகரக் கழகச் செயலாளர் சு.ப.தமிழழகன், மாவட்டக் கழக நிர்வாகிகள் கோவி.அய்யாராசு, க.நசீர் முகமது, ஜெ.நடராஜன், ஜெயலெட்சுமி நடராஜன், எஸ்.துரை முருகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, மற்றும் ஒன்றிய, பகுதி, பேரூர்க் கழகச் செயலாளர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகரக் கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், ஒன்றிய பெருந்தலைவர்கள், மாநகராட்சி மண்டல, நிலைக் குழு, திட்டக்குழு தலைவர்கள், கழக பிரதிநிதிகள், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள், கலந்து கொள்ள உள்ளனர்.

கூட்ட முடிவில் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் கே.வினோத்குமார் நன்றியுரையாற்றுகிறார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கி.வே. செந்தில்குமார்

**சனவரி 24 (2010)**



இளம்பிராயத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, இரண்டு முறை கும்மிடிப்பூண்டி ஒன்றியக் கழகச் செயலாளராகப் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவு விற்பனைச் சங்க துணைத் தலைவராகவும், காஞ்சிபுரம் – திருவள்ளூர் மாவட்ட விற்பனைக் குழு இயக்குநராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக ஜெ. அரசால் தலைவர் கலைஞர் கைது செய்யப்பட்ட போது, மறியலில் ஈடுபட்டதற்காக இரண்டு மாதத்திற்கும் மேலாக சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.ராமச்சந்திரன்

**சனவரி 24 (2011)**



கழகம் துவங்கிய காலம் முதல் கழகப் பணியாற்றியவர்.

வடபெரும்பாக்கம் கிளைக் கழக அவைத் தலைவராக இருபது ஆண்டுகள் பொறுப்பு வகித்தவர்.

சாலைப் பணியாளர்கள் சங்க கமிட்டி உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**




## சேலத்தில் எழுந்த இளைஞர் சுனாமி!

# வடக்கின் இருட்டை அகற்ற நம்மால்தான் முடியும்; வாருங்கள்!

## கழக இளைஞரணி மாநில மாநாட்டில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

சேலம், ஜன. 24 -

திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு ஜனவரி 21 ஆம் தேதி சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன் பாளையத்தில் பிரம்மாண்டமாக நடைபெற்றது.

இந்த மாநாட்டில் கழக துணைப் பொதுச் செயலாளரும், மக்களவை கழக குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. மாநாட்டு உரை நிகழ்த்தினார்.

அப்போது அவர் பேசியதாவது : -

நம்முடைய இளைஞரணியின் முதல் மாநாடு நெல்லையில் நடைபெற்றது. அபோது கடல் புரண்டு நெல்லை நகரத்துக்குள் வந்து விட்டதோ என்று எண்ணத் தோன்றியது. ஆனால் இன்று சேலத்தைப் பார்க்கிறபோது சேலத்துக்குள் சுனாமியே வந்துவிட்டதோ என்று எண்ணக் கூடிய அளவுக்கு இளைஞர் பட்டாளம், இளைஞர் படை கூடியிருப்பதைப் பார்த்து அத்தனை பேரின் உள்ளமும் மகிழ்ச்சியில் கரைபுரண்டு ஓடுகிறது.

தலைவர் கலைஞர் அவர்கள் இருந்திருந்தால்... ‘நான் உங்களை பார்த்துக் கொண்டிருந்தாலே போதும்... பேசக் கூடத் தோணவில்லை’ என்று மகிழ்ச்சியோடு சொல்லும் அளவுக்கு இளைஞர் பட்டாளம் நம் முன்னால் குவிந்திருக்கிறது.

இந்த மாநாட்டின் வெற்றிக்காக உதயநிதி அவர்கள் தொடர்ந்து உழைத்திருக்கிறார். தொடர்ந்து ஒவ்வொரு மாவட்டமாக சென்று அங்கே இருக்கக் கூடிய இளைஞர்களை, மாவட்டச் செயலாளர்களை சந்தித்து, அவர்களை எல்லாம் வேலை வாங்கி இந்த மாநாட்டை இவ்வளவு வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருக்கிறார்.

நிச்சயமாக நமது தலைவர் அண்ணன் தளபதி அவர்கள், தன் மகனை சான்றோன் என கேட்ட தாய் போல, மகிழ்ச்சியோடு புளகாங்கிதத்தோடு அமர்ந்திருப்பார்கள்.

இந்த அரங்கம் தலைவர் கலைஞர் பெயரால் அமைக்கப்பட்டிருக்கிறது.



உருவாய் அருவாய், உளதாய் இலதாய் மருவாய் மலராய், மணியாய் ஒளியாய்க் கருவாய் உயிராய்க், கதியாய் விதியாய்க் குருவாய் மதிக்கக் கூடிய நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கக் கூடிய தலைவர் பெயரில் அமைந்திருக்கக் கூடிய அரங்கத்தில் நின்று பேசுவது பெரு மகிழ்ச்சியைத் தருகிறது.

அதுமட்டுமல்லாமல்... நம்முடைய இயக்கத்தின் இருவண்ணக் கொடியை ஏற்றிடும் பெரும் வாய்ப்பினை தந்தமைக்கும் தலைவர் அண்ணன் தளபதி அவர்களுக்கும் உதய்க்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே சேலத்தில்தான் தலைவர் கலைஞர் அவர்கள் திமுகவின் மாநில மாநாட்டிலே 1997 இலே நமது கழகத்தின் கொடியை ஏற்றினார்கள். இதேபோல 2004 இல் அண்ணன் வீரபாண்டியார் நடத்திய மாநாட்டிலே நம்முடைய அண்ணன் தளபதி அவர்கள் மாநாட்டுக் கொடியை ஏற்றினார்கள். அந்த சேலத்தில் இன்று இந்த மாநாட்டில் கழகக் கொடியை ஏற்றி வைக்கும் வாய்ப்பினை அதுவும்... சேலத்தின் அடையாளமான வீரபாண்டியாரின் பெயரிலே உருவாக்கப்பட்டிருக்கக் கூடிய கொடி மேடையில் நின்று, கொடியேற்றக் கூடிய வாய்ப்பு கிடைத்ததை நினைத்து பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

### கருப்பு - சிவப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்கள் நமது இயக்கம் தொடங்கப்பட்டபோது, ‘நம் கொடியிலே கருப்பு சிவப்பு இருக்கிறது. கருப்பு என்பது இந்த சமூகத்திலே இருக்கும் அரசியல், சமூக, பொருளாதார இருண்ட நிலையை குறிக்கிறது. இவை எல்லாம் மாற வேண்டும் என்பதற்காக இந்த சிகப்பு நிறம் கீழே இருக்கிறது. கருப்பும் சிவப்பும் சிவப்பாக மாற வேண்டுமென்றால் உதயசூரியன் ஒளியாலே இந்த இருண்மை விரட்டியடிக்கப்பட வேண்டும் என்றார் அண்ணா.

நமது தளபதியின் ஆட்சியிலே அண்ணாவின் கனவு தலைவர் கலைஞரின் வழியிலே ஏறத் தாழ நிறைவேறிவிட்டது. திராவிட மாடல் ஆட்சியில் இந்தியாவில் சிறந்த மாநிலமாக தமிழ்நாடு மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. எல்லா துறைகளிலும் முதன்மை மாநிலமாக இருக்கக் கூடியது தமிழ்நாடு என்ற பெருமையை முதலமைச்சர் நமக்காக வழங்கியிருக்கிறார்.

நீங்க கேட்கலாம், ‘எல்லாம் கிடைத்து விட்டதே. அப்புறம் ஏன் கொடியில் கருப்பு இருக்கிறது. சிவப்பாக மாற்றிவிடலாமே?’ என்று. தென்னகத்திலே இருக்கக் கூடிய தமிழ்நாட்டிலே சிவப்பு வந்துவிட்டது. ஆனால் வடநாட்டிலே இன்னும் கருப்பு இருந்துகொண்டுதான் இருக்கிறது. அதை விரட்ட வேண்டிய அந்த கடமையும் நமக்கு இருக்கிறது. இந்தியாவிலே இருக்கக் கூடிய இருண்மையையும் விரட்ட வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது என்பதால்தான் அண்ணன் தளபதி அவர்கள், இந்தியா கூட்டணியை ஒருங்கிணைத்து அழைத்துச் சென்றுகொண்டிருக்கிறார்.

### நாம் பெரியாரின் பிள்ளைகள்!

நாம் பெரியாரின் பிள்ளைகள். கொள்கைகளைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால், அங்கே வட இந்தியாவிலே ஒரு கோயிலைத் திறக்கிறார்கள். அந்த கோவிலைத் திறப்பது பற்றி நான் எதுவும் சொல்லப் போவதில்லை. ஏன் குடியரசுத் தலைவரை அழைக்கவில்லை என்றும் நான் கேட்கப் போவதில்லை. ஆனால் பிரதமர் கோயிலைத் திறக்கும் முன்பு தமிழ்நாட்டில் ஷேத்ராடனம் செய்துகொண்டிருந்தார். அதைப் பற்றியும் எங்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை.

இங்கே நமது அறநிலையத்துறை அமைச்சர் அமர்ந்திருக்கிறார். எனக்கு கோயில்களைப் பற்றி தெரியாது. அவரிடமே கேட்கிறேன். ‘ஒரு கோயிலை முழுசா கட்டி முடிக்காம தெறக்கலாமா?... உங்களைத் தான் கேட்கிறேன்”என்று கனிமொழி அவர்கள் கேட்டதும் மேடைக்கு முன்னர் அமர்ந்திருந்த அமைச்சர் சேகர்பாபு அவர்கள் எழுந்து, ‘தெறக்கக் கூடாது...’ என்று பதில் அளித்தார்.

‘தெறக்க கூடாதுல்ல... ஆனா பிஜேபி என்ன சொல்லுது? நாங்கதான் இந்து மதத்தைக் காப்பாத்துறோம், நாங்கதான் சனாதனத்தைக் காப்பாத்துறோம், நாங்கதான் கோயில்களை எல்லாம் காப்பாத்துறோம், எங்ககிட்டையே கொடுத்துங்க’ என சொல்கிறார்கள். கட்டி முடிக்காத கோயிலைத் திறக்கக் கூடாது என்று சொல்கிறது இந்து மதம். எங்க அண்ணி இங்கே உட்கார்ந்திருக்காங்க, அவங்களுக்கும் மனசு கஷ்டமாதான் இருக்கும்.

ஆனால் இந்துக்களை மதிக்காமல் இந்துக்களின் உணர்வுகளை மதிக்காமல் அரசியலுக்காக அரசியல் லாபத்துக்காக, ‘உங்க ஆளுங்களே கோயிலுக்கு வரமாட்டேன்’ என்று சொல்லக் கூடிய அளவுக்கு அரசியல் விளையாட்டிலே கோயிலைத் திறக்கிறீர்கள். அதுக்கு அரை நாள் லீவு வேறு.

தனியார் டிரஸ்ட் திறக்கும் கோயிலுக்கு அரசு ரயில்கள் எல்லாம் இலவசமாக விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் நாம் கேட்கக் கூடாது. இதையெல்லாம் கேள்வி கேட்டால் நமக்கு ICE வைப்பார்கள். ஐஸ் என்றால் இன்கம் டாக்ஸ், சிபிஐ, இ.டி. யார் கேள்வி கேட்டாலும் இது மூன்றும் தேடி வரும்.

ஆனால் இதற்கெல்லாம் பயந்தவர்கள் தமிழ்நாட்டில் யாரும் இல்லை. நீங்கள் என்ன செய்தாலும் உங்களை எதிர்த்து நிற்போம், உங்கள் கருத்துகளை எதிர்த்து நிற்போம். எதிர்த்து நின்று மத்தியிலே இருக்கக் கூடிய ஒன்றிய அரசை மாற்றிக் காட்டுவோம். இதில் மாற்றமில்லை.

### தமிழ்நாட்டை வஞ்சிக்கும் பிரதமர்!

தமிழ்நாட்டை எந்தெந்த வகைகளில் வஞ்சிக்க முடியுமோ அப்படியெல்லாம் வஞ்சித்துக் கொண்டிருக்கிறீர்கள். தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய மக்களுக்கு கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகையை பிரதமர் தருவதில்லை. கடந்த மாதம் பெருவெள்ளம் வந்தது. அப்போது பிரதமர் சொன்னார்... நான் மூத்த அமைச்சர் ராஜ் நாத் சிங்கை அனுப்பியிருக்கிறேன், நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை அனுப்பியிருக்கிறேன். இரண்டு பேரும் பார்வையிட்டார்கள். ஆனால் அஞ்சு பைசா கூட இன்னும் வரவில்லை.

ஆனால் இதே குஜராத்தில் வெள்ளம் வந்தபோது ஆயிரக்கணக்கான கோடிகளைக் கொண்டுபோய் அங்கே கொட்டினீர்கள். தமிழ்நாட்டில் இருக்கக் கூடியவர்கள் மனிதர்கள் இல்லையா? எனது தொகுதியான தூத்துக்குடியில் எத்தனை ஆயிரம் மக்கள் வீடுகளை இழந்திருக்கிறார்கள்... வெள்ளத்தில் வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன. எத்தனை விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சென்னை எந்த அளவுக்கு மோசமாகப் பாதிக்கப்பட்டது... இதெல்லாம் உங்கள் மனதை உருக்கவில்லையா?

தமிழ்நாட்டு மக்கள் உங்களுக்கு வாக்களிக்க மாட்டார்கள். அதனால் எந்த நிவாரணமும், எந்த உதவியும் நியாயமாக வழங்க வேண்டிய நிவாரணமும் வழங்க மாட்டீர்கள்.

வெள்ளம் பாதித்த பகுதிகளைப் பார்வையிட்ட நிதியமைச்சர் என்ன பண்ணினாங்க? அங்க இருக்குற கோயிலுக்கு போய், பூசாரிக்கு ஏன் சம்பளம் கம்மியா கொடுக்குறீங்கனு கேள்வி கேட்கிறார்கள். எதை ஆய்வு செய்யச் சொன்னால் எதை ஆய்வு செய்கிறார்? இதுதான் அவர்களின் எண்ணம், அடிப்படை. யாரைப் பற்றியும் அவர்களுக்கு அக்கறை இல்லை.

விரைவிலே ஒரு மாற்றம் வர வேண்டும். அந்த மாற்றம் தமிழ்நாட்டில் மட்டும் வந்தால் போதாது. தமிழ்நாட்டில் நாற்பதுக்கு நாற்பது நாம் வெற்றி பெறுவது உறுதி. ஆனால் இந்த மாற்றம் நாடு முழுவதும் வரவேண்டும். அப்படி வரவேண்டுமென்றால், இந்த இளைஞர் பட்டாளம் இப்படியே நடந்து வட இந்தியாவுக்கு போனீர்கள் என்றாலே போதும்... அங்கேயும் மாற்றம் நிச்சயமாக வரும். அந்த மாற்றத்தை உங்களால் நிகழ்த்த முடியும். அந்த மாற்றம் மட்டுமே நாட்டைக் காப்பாற்றும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.

# திராவிடப் போராளிகள் 51

■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

## கொள்கைச் சுடரொளி என்.வி.என். புவனேஸ்வரி!



ஓவியம் : ரவி பேலட்

காலந்தோறும் தொடர்கின்ற சுயமரியாதை சமத்துவத்துக்கான உரிமைக் குரலின் இருபதாம் நூற்றாண்டு வடிவம்தான் திராவிட இயக்கம். அதன் மற்றொரு தனிச்சிறப்பு, எண்ணற்ற பெண்களின் பங்கேற்பு.

அத்தகைய போராளிப் பெண்கள் வரிசையில் நாம் அறிந்துகொள்ள வேண்டியவர் புவனேஸ்வரி. 1918-ஆம் ஆண்டு சென்னைக்கு அருகில் செங்குன்றம் பகுதியிலுள்ள ஞாயிறு என்ற ஊரில் பிறந்தவர். தந்தை பெயர் குப்புசாமி பாகவதர். தாயார் அமிர்தம் அம்மாள். அவர் குடும்பத்தின் பக்தியைப் பெற்றோர் பெயரே விளக்கிவிடும். புவனேஸ்வரியும் பழமையிலும் பக்தியிலும் ஊறியவர்தான். அவரது பெற்றோர் பார்த்துவைத்த மணமகன் நடராசனோ, தீவிர பெரியார் தொண்டர். என்.வி.என். என்றால், இன்னும் எளிதாகப் புரியும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்களில் ஒருவர் என்.வி.நடராசன். தொடக்கத்தில் காங்கிரஸ் இயக்கத்தில் தீவிரமாகப் பணியாற்றியவர். பின்னர் தந்தை பெரியாரின் தொண்டராகவும், அண்ணாவின் தோழராகவும் மாறியவர். அதனால் தன் திருமணத்தை, தந்தை பெரியார் தலைமையில் நடத்திக்கொள்ள வேண்டுமென்று தீவிரமாக இருந்தார். எனவே புவனேஸ்வரி-என்.வி.நடராசன் ஆகியோரின் திருமணம் தந்தை பெரியார் தலைமையில் 1936-ஆம் ஆண்டு நடைபெற்றது.

முதல் பெண் குழந்தை 1937-ஆம் ஆண்டு பிறந்தது. இரண்டாவது பிறந்த ஆண் குழந்தைக்கு ஆறு மாதமான போது இந்தி எதிர்ப்புப் போராட்டம் தமிழ்நாட்டில் வெடித்தது. அன்றைய சென்னை மாகாண முதல்வர் ராஜாஜியின் இந்தித் திணிப்பையும் அடக்குமுறையையும் எதிர்த்து நின்ற பெரியார் பெரும்படையில் முன்னணி வீரராக இருந்தார் என்.வி.என்.

13.11.1938 அன்று காலை புவனேஸ்வரியின் பெற்றோர் மிக விரிவான ஒரு பூஜைக்கு ஏற்பாடு செய்து இருந்தார்கள். நூறு தேங்காய், நூறு பழம், நூறு மஞ்சள் என ஏராளமான பொருட்கள் பரப்பிவைக்கப்பட்டன. புவனேஸ்வரியும் குளித்துவிட்டு பூஜைக்குத் தயாரானார். திடீரென்று அங்கு வந்த அவர் கணவர் நடராசன், பூஜைக்கு முன்னால், ‘சிவன் கோயிலுக்குப் போய் வந்துவிடலாம்’ என்றழைத்தார். கோயிலுக்குப் போகாத கணவரின் அழைப்பு புதிராக இருந்தது புவனேஸ்வரிக்கு. அவர் அழைப்பது கோவிலுக்கு அல்ல, என்பது புரிந்தாலும் கணவர் சொன்னது போல் ஒரு பையில் தேங்காய், பழம் எடுத்து வைத்துக்கொண்டு ஆறுமாத குழந்தையான சோமுவை இடுப்பில் தூக்கிக்கொண்டு வந்துவிட்டார், புவனேஸ்வரி.

இருவரும் சென்ற இடம் சென்னை பெத்துநாயக்கன்பேட்டை . அங்கு சென்றவுடன் தேங்காய், பழப் பையை அங்குள்ள கோயில் வாசலில் வைத்துவிட்டு, ‘வா நாம் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும்’ என்றழைத்தார் என்.வி.என். “அவர் கூறியதைக் கேட்டு நான் வியப்படையவில்லை. ஏனெனில், அவர் “கோயிலுக்கு வா” என்றழைத்தபோதே எனக்குத் தெரியும், நாம் போவது கோயிலுக்கு அல்ல என்று. எனக்கும் கட்டாய இந்தியை எதிர்க்க வேண்டும் என்ற வேகம் இருந்தது. பையை கோயில் வாசலில் வைத்துவிட்டு, இந்தி எதிர்ப்புப் போரில் கலந்துகொண்டு இந்தியை எதிர்த்து, ஆவேசமாக முழக்கமிட்டேன்” என்று என்.வி.என். அவர்களின் மணிவிழா மலரில் தன் இனிமையான நினைவாகப் பதிவு செய்தார் புவனேஸ்வரி.

டாக்டர் தர்மாம்பாள், மூவலூர் ராமாமிர்தம் ஆகியோருடன் போராட்டக் களத்தில் இறங்கி கைது செய்யப்பட்டவர்களில் புவனேஸ்வரியும் ஒருவர். அந்தப் போராளிகளைக் கைது செய்தது காவல்துறை. கைது செய்யப்பட்ட பெண்களின் உறவினர்கள் வாழ்த்து கூறி, விடைகொடுத்த போது ஆறுமாத குழந்தையுடன் போலீஸ் லாரியில் ஏறி விடைகொடுக்கத் தன் கணவரைத் தேடினார் புவனேஸ்வரி. அவரோ போராட்டத்துக்கு அடுத்த அணியைத் தயார் செய்யச் சென்றுவிட்டார்.

**ஒரு பெண்ணாக, உள்ள உறுதியோடு சிறைக்குச் செல்வது எளிது. ஆனால், ஒரு தாயாகத் தன் குழந்தை அடைந்த துன்பத்தைப் பார்த்த பின்பும் புவனேஸ்வரியின் கொள்கை உறுதி குறையவில்லை.**

ஒரு பெண்ணாக, உள்ள உறுதியோடு சிறைக்குச் செல்வது எளிது. ஆனால், ஒரு தாயாகத் தன் குழந்தை அடைந்த துன்பத்தைப் பார்த்த பின்பும் புவனேஸ்வரியின் கொள்கை உறுதி குறையவில்லை. அவரது குழந்தை சோமுவுக்கு சிறைச்சூழல் ஒப்புக்கொள்ளாததால் ரத்தபேதி ஏற்பட்டது. மருந்துகளும் பலனளிக்கவில்லை. குழந்தையை வீட்டுக்கு எடுத்துச்செல்லுவோம் என்ற நம்பிக்கையே இல்லை. அந்த நிலையிலும் புவனேசுவரி அம்மையார் வேண்டுகோள் விடுத்தோ மன்னிப்பு கேட்டோ வெளியே வரவில்லை.

சிறையில் உடனிருந்த சகோதரப் போராளிகளின் அக்கறையாலும், அதிகாரிகள் காட்டிய அன்பினாலும், குழந்தை குணமடைந்து ஆறு வார கால சிறைத்தண்டனையை முடித்த பிறகே, சிறையை விட்டு விடுதலையானார் புவனேஸ்வரி.

போராட்டத்துக்கு அனுப்பிய கணவர் என்.வி.நடராசன், புவனேசுவரி சிறை செல்லும்போது விடைகொடுக்கவுமில்லை, விடுதலையான பின்பு அழைத்துச் செல்லவும் வரவில்லை.

கணவரின் கட்டாயத்தால் போராட வந்தவராய் இருந்திருந்தால், புவனேசுவரியின் எதிர்வினை வேறுமாதிரி இருந்திருக்கும். ஆனால், பொதுப்பணிக்குத்தான் அவர் முக்கியத்துவம் கொடுப்பார் என்பதை உணர்ந்திருந்த புவனேசுவரியின் மனப்பக்குவம் அதற்காக அவரை வருத்தப்பட விடவில்லை. மேலும் ’சிறை எனக்குத் துன்பமாக இல்லை’ என்றார். சிறை சென்று வந்த மருமகளைப் பெருமையோடு வரவேற்றார் மாமியார். ஆனால், புவனேஸ்வரியின் தாயும் தந்தையும் சிறைக்குப் போன பெண் தீட்டுப்பட்டு விட்டவள் என்று கருதி, தங்கள் மகளை நீண்ட காலம் பார்க்க மறுத்தார்கள்.

“அவர்கள் சிறைவாசத்தை அவமானமாகக் கருதினார்கள். நான் சிறைத்தியாகம், வேள்விக்குரிய புனிதஸ்தலம் என்பதை அவர்களுக்குப் புரியவைத்தேன்” என்றார் புவனேசுவரி.

மேலும், இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தின் அரசியல் பின்னணியை அவர் எவ்வளவு தெளிவாக அறிந்திருந்தார் என்பது அவரது சொற்களில் வெளிப்பட்டது. “போராட்டத்தில் ஈடுப்பட்ட தாய்குலத்தைக் கேலி செய்யும் வகையில், குழந்தைக்கு பால் வாங்கிக் கொடுத்து வளர்க்க வக்கில்லாதவர்களும் அறைப்பட்டினிகளும் ஜெயிலுக்குப் போகின்றன” என்று முதல்வர் ராஜாஜி அமிலச் சொற்களை வீசினார்.

அவரது ஆணவப் பேச்சை தந்தை பெரியார் கண்டித்து அறிக்கை விட்டதுடன், சிறைச்சாலையில் உள்ள குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் பால், பிஸ்கட் போன்ற உணவுப் பண்டங்களை அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தினார். அதனால் பால் டின்களும், பிஸ்கட் பாக்கெட்டுகளும் ஹார்லிக்சும் பழவகைகளும் மலையாகக் குவிந்தன என்ற செய்தியையும் புவனேஸ்வரி அம்மையார் பதிவு செய்துள்ளார்.

தன் சிறைவாசத்தின் இரண்டு பெருமைகளாக புவனேஸ்வரி அம்மையார் கருதியது, தன் கணவருக்கு முன்னால், தான் சிறைக்குச் சென்றதும், தன் மகன் சோமு இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போரில் சிறை சென்றதையும்தான். “என்னோடு சிறையில் இருந்த சோமுவிற்கு நான் புகட்டிய பால் உணவாக மட்டுமல்லாமல், இந்தி எதிர்ப்பு உணர்ச்சிப் பாலாகவும் இருந்தது” என்று பல்லாண்டுகள் கழித்து நினைவுகூர்ந்தார், புவனேஸ்வரி அம்மையார்.

குடும்பப் பொறுப்புகளோடு இயக்கக் கூட்டங்களிலும் தொடர்ந்து பங்கேற்றார் புவனேசுவரி அம்மையார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகளிர் அணி, 1956-ஆம் ஆண்டு ‘மகளிர் மன்றம்’ என உருவாக்கப்பட்டது. அதன் செயலாளர்கள் இரண்டு பேர். ஒருவர் புவனேசுவரி நடராசன். மற்றொருவர் வெற்றிச்செல்வி அன்பழகன்.

புவனேஸ்வரி அம்மையாரின் கொள்கைப் பற்று தன் கணவர் என்.வி.நடராசருடன் சேர்ந்து, அவர் உருவாக்கிய பாரம்பரியத்தில் எதிரொலித்தது. ஆம், ஆறுமாதக் குழந்தையாக 1938-இல் தாயுடன் சிறைசென்ற என்.வி.என். சோமு, 1965-இல் இளைஞராக இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போரில் சிறை சென்றார். அவரது உழைப்பைப் பாராட்டிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்திய நாடாளுமன்ற மக்களவை உறுப்பினராகவும் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சராகவும் செயல்படும் வாய்ப்பினை அளித்தார்.

1938 ஆம் ஆண்டின் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டமும், அதில் பங்குபெற்ற திராவிடப் போராளிகளின் வாழ்க்கைச் செய்திகளும் பல தலைமுறைகளுக்கு எடுத்துச் சொல்லவேண்டிய பாடங்களாக இருக்கின்றன என்பதையே புவனேஸ்வரி நடராசன் என்ற திராவிடப் போராளியின் வாழ்க்கை விளக்குகிறது.

(வருவார்கள்...)

### பா.ஜ.க.வுக்கும் சேர்த்தே பேசுகிறது, தி.மு.க !

பல லட்சம் தொண்டர்களைக் கூட்டி, கருத்தியல் வகுப்புகளை நடத்துகிற துணிச்சலும் ஆற்றலும் கொண்ட பேரியக்கம் தி.மு.கழகம் என்பதை, சேலத்தில் நடைபெற்ற இளைஞர் அணி 2-வது மாநில மாநாடு மெய்ப்பித்திருக்கிறது. மாநில உரிமைகளை அடகுவைத்த எடப்பாடி பழனிசாமியின் சொந்த மாவட்டமான சேலத்தில், ‘மாநில உரிமை மீட்பு’ மாநாட்டை மிகப் பிரமாண்டமாக நடத்தியது ஏகப் பொருத்தமானது என்பதை, பேச்சாளர்கள் பலரும் சுட்டிக்காட்டினர்.

தற்போது, பிரதமராக இருக்கிற நரேந்திர மோடி அவர்கள், குஜராத் மாநிலத்தின் முதல்வராக இருந்தபோது மாநிலங்களுக்கு அதிக உரிமைகள் வேண்டும், முறையான நிதி ஒதுக்கீடு வேண்டும் என்றெல்லாம் கேட்டவர் 2014-ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்தவுடன் அனைத்து மாநிலங்களுக்கான நிதியைக் குறைக்கும் விதமாக நிதிக்குழுவுடன் மோடி ரகசிய ஆலோசனை நடத்தியதாக, இப்போது தகவல் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இதுபோன்ற மாநில உரிமைப் பறிப்புகளால் பா.ஜ.க ஆளும் மாநிலங்களும் சேர்ந்துதான் பாதிக்கப்படுகின்றன. சேலம் மாநாட்டில் இதனைக் குறிப்பிட்டுப் பேசிய இளைஞர் அணி செயலாளர், “திமுக மாநில உரிமைகள் கேட்பது தமிழ்நாட்டுக்காக மட்டும் அல்ல, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்காக மட்டும் அல்ல, பா.ஜ.க ஆளும் மாநிலங்களுக்கும் சேர்த்தே கேட்கிறது” என்றார். உரிமை கேட்பது ஆட்சியாளர்களுக்காக அல்ல, மக்களுக்காக அதுதான் மாநில உரிமை என்பதை உரத்துச் சொல்லியது சேலம் மாநாடு!.

### :ப்ளாஷ்பேக்



### அண்ணா கையால் மோதிரம்!



உதய வர்மன்

1967-ஆம் ஆண்டு டிசம்பர் 31 அன்று அன்றைய முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள், திராவிட இயக்க தீரர் திருச்சி எஸ்.ஏ.ஜி ராபி அவர்களுக்கு நிதி அளிப்புக் கூட்டத்தை அறிவித்தார். அந்த முயற்சியில், அதிக நிதியை வசூலித்தவர் என்ற முறையில் அண்ணா அவர்களின் கையால் என் தாத்தா மு.ந.வீராசாமி அவர்களுக்கு மோதிரம் வழங்கப்பட்டது. பல பழைய படங்கள் அவரிடம் இருந்தாலும், பேரறிஞர் அண்ணாவுடன் இருக்கும் இந்தப் படம் அவருக்கும் எங்களுக்கும் மறக்க முடியாத ஒன்று..

**-உதய வர்மன், சிறுகாம்பூர், மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சி மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்பு ங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

### முன்னோடி நீதிக்கட்சி!

**1924-இல் பனகல் அரசரின் அமைச்சரவையில் பணியாளர் தேர்வு வாரியம் உருவாக்கப்பட்டது. வேலை வாயப்புகளில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்டோர் 100 பேர்களுக்கு 10 பேர் கூட இல்லை என்ற நிலையை மாற்ற, இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவிலேயே முதன்முதலாக அமைக்கப்பட்ட பணியாளர் தேர்வு வாரியம் இதுதான். பின்னர் 1929-ல் தேர்வாணையக் குழுவாக உருவெடுத்தது. இன்றைக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு வாரியமாக மாறியிருக்கிறது.**

### திராவிடத்தால் வாழ்கிறோம் 367




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131